# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

VOLUME - 1 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 12

DECEMBER 2017 TAMIL & MALAYALAM

ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=


*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*


0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com




கர்த்தருக்குள் அன்பானவர்களே !

உங்கள் யாவருக்கும் சமாதானம் உண்டாவதாக. உங்கள் யாவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துதலை கூறிக்கொள்கிறேன். வருடத்தின் கடைசி நாட்களில் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். இம்மட்டும் நம்மை காத்த இம்மானுவேல் இன்னும் இனிமேலும் காத்து வழிநடத்துவார்.

**2017 செப்டம்பர்,நவம்பர்** மாதம் ஜாமக்காரன் செய்திகள் அனைத்தும் இந்தியாவில் உள்ள CSI சபை விசுவாசிகளுக்கு மாத்திரம் எழுதப்பட்டதாகும்.

பெரும்பாலான CSI விசுவாசிகள், ஆயர்கள், ஓய்வுபெற்ற பிஷப்மார்கள் தமிழ்நாட்டில் மட்டுமல்ல மற்ற நான்கு மாநிலங்களிலிருந்து தங்கள் ஆதரவையும், நன்றியையும் அறிவிப்பதாக அறிவித்தது எனக்கு பெரும் சந்தோஷத்தை கொடுத்தது. பலர் மேலும் என்னை வெறுக்கவும், பகைக்கவும் செய்தார்கள். அதை நான் எதிர்பார்த்ததுதான்.

CSI சபை அங்கத்தினர்கள் இந்தியா, வெளிநாடு ஆகிய இடங்களில் வாழ்பவர்கள் இனி என்ன செய்யப்போகிறார்கள்? விவரங்களை அறிவிக்க வேண்டியது அறிவித்தாகிவிட்டது. இனி செயல்பட வேண்டியது நீங்கள்தான்? என் கடமை முடிந்தது.

கேரளாவில் உள்ள கோட்டயம் மத்திய கேரள CSI டையோசிஸ் பிஷப் & மாடரேட்டர் அவர்கள் கேரளாவில் உள்ள மற்ற டையோசிஸ்களான **கொச்சின்** டையோசிஸ், தெற்கு கேரளா **கொட்டாரக்ககரா** டையோசிஸ், **மலபார்** டையோசிஸ், **கிழக்கு** கேரளா டையோசிஸ் ஆகிய 6 CSI டையோசிஸ் பிஷப்மார்களை மட்டும் சினாட் அலுவலகத்தக்கு வரவரழைத்து தனி கூட்டம் நடத்தி ஆலோசனை நடத்தியுள்ளார்கள். எதற்காக?, என்ன திட்டம்? என்பது இதுவரை எனக்கு செய்தி ஏதும் வரவில்லை.

# DECEMBER 2017

இப்படி **கன்னடம், தெலுங்கு, இலங்கை** CSI டையோசிஸ்களில் திருநெல்வேலி அல்லாத **தமிழ்நாட்டின்** மற்ற CSI டையோசிஸ் **பிஷப்மார்**, டையோசிஸ் பொறுப்பாளர்கள் என்ன திட்டம் வைத்துள்ளாளார்கள் என்ன மாற்றம் கொண்டு வரப்போகிறார்கள்? என்பதையும் அறியவில்லை.

CSI திருச்சபையின் **ஆவிக்குறிய மாற்றங்களுக்காக** இவர்கள் யாரும் ஒன்று கூடமாட்டார்கள் என்பதையும் நாம் அறிவோம். பிரச்சனைகளை எப்படி எதிர்கொள்வது? சமாளிப்பது அல்லது தப்பிப்பது என்பதை குறித்து மட்டுமே இவர்கள் ஆலோசிப்பார்கள் என்று தெரிகிறது. இதற்காக பல மாநிலங்களில் கேரளா உட்பட அனைத்து CSI டையோசிஸ் பிஷப்மார்களும் ஏராளமான சட்ட ஆலோசகர்களுக்கு பெரிய தொகை கொடுத்து ஆலோசனை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

இப்போதே சில டையோசிஸ்களில் கல்லூரி லெக்சரர் வேலைக்கு இரண்டு பேரை பணியமர்த்த ஒரு குறிப்பிட்ட டையோசிஸ் ஒரு ஆளுக்கு **40 லட்சங்கள்** வீதம் வாங்கியிருக்கிறது என்று கேள்விப்பட்டேன். இரண்டு நபர்களுக்கு லெக்சரர் வேலைக்கு ஏறக்குறைய 1 கோடி வாங்கியிருக்கிறது என்றால் மீதி உள்ள வேலைக்கு ஆசிரியர் பணிக்கு, கடைகளை லீஸ்க்குவிட இப்படி பல விதங்களில் டையோசிஸ் நிர்வாகிகள் பணம் பெற்று பங்கு போட்டுக்கொள்ளும் அவலம் மார்டின் **லூத்தர் புரோட்டஸ்டன்ட்** சீர்திருத்த நாட்களை நினைவு கூறும் மாதங்களிலேயே இந்த வெட்கக்கேடு **லூத்தரன், CSI சபைகளில்** நடந்துள்ளது. எத்தனை மார்டின் லூத்தர்கள் திரும்ப எழுந்தாலும் இவர்களிடம் ஒரு மாற்றமும் வராது போல் தோன்றுகிறது

CSI & லூத்தரன் சபைகளின் தற்போதைய நிலையை பார்க்கும்போது மனம் மிகவும் வேதனைப்படுகிறது.

சபைக்குள் உள்ள விசுவாசிகள் உங்கள் ஆத்துமாவை இனி நீங்கள்தான் வளர்க்க சில நல்ல ஆவிக்குறிய ஏற்பாடுகளை செய்துக்கொள்ளவேண்டும். சிறு கூட்டமானாலும் ஒவ்வொரு சபையிலும் **மனம்திரும்பி இரட்சிக்கபட்டவர்களைகூட** சேர்த்து ஜெபகுழுக்களை சபைக்குள் ஆயரின் உத்தரவுபெற்று ஆரம்பியுங்கள். சில இடங்களில் ஆயர்கள் இரட்சிக்கபடாத கமிட்டியின் கட்டுபாட்டுக்குள் அடங்கியிருப்பவரானால் சபைக்குள் ஜெபிக்க அனுமதிக்கமாட்டார்கள். சபைக்கு வெளியே வராந்தாவில், சபை வளாகத்தில், சில இடங்களில் மெயின் கேட்டுகளை கூட வேண்டுமென்றே மூடிவிடுவார்கள். ஆகவே அருகே பள்ளிக்கூட மரத்தடியில் கூடி வேத வசனத்தை ஒருவர்கொருவர் பகிர்ந்துகொண்டு கூடி ஜெபித்து ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேறுங்கள். சபைஅரசியலில் அதாவது கமிட்டி எலக்ஷன், சபைக்குள் உள்ள **பொறுப்புகளிலிருந்து** காரணம் ஏதும் **கூறாமல் விலகியிருங்கள்.** சபையில் யாரைப்பற்றியும் பேசாமல் எந்த தவறுகளையும் கண்டும் காணாதவர்களாக நடந்துக்கொள்ளுங்கள். ஆனால் சபை ஆயர்,நிர்வாகிகளுக்காக பாரத்துடன் ஜெபியுங்கள்.

அநேக ஆண்டுகளுக்குமுன் சேலத்தில் எங்கள் CSI சபையிலும் நன்றாக ஜெபித்துக் கொண்டிருந்த பெண்கள் ஜெபத்தை நிறுத்திவிட்டார்கள். **பெண்கள் ஐக்கிய சங்கம்** கூடுகையே போதும் அதைத்தவிர வேறு தனி ஜெபங்கள் நம் சபையில் வேண்டாம் என்று கூறிவிட்டனர்.

விசுவாசிகளும், என் மனைவியும் ஜெபிக்கும் வேறு சிலரும் சகோதரிகளும் வழக்கமாக கூடும் நேரத்தில் **பூட்டப்பட்ட ஆலயத்தின்முன்**உள்ள **வராந்தாவில் ஒவ்வொரு வாரமும்**

ஜெபித்து பிரிந்துபோனார்கள். நல்லவேளை அந்த காலத்தில் எங்கள் சபைக்கு மெயின்கேட் இல்லாமல் இருந்தது. பல சபைகளில் இப்படிப்பட்ட எதிர்ப்புகள் இப்போதும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. அவரவர் ஆத்துமாவுக்கு அவரவர்தான் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.

**சபை சரியில்லை, ஆயர் சரியில்லை, கமிட்டி எதிர்ப்பு. பிஷப்** சரியில்லை என்று சாக்குபோக்குகள் கர்த்தரிடம் கூறவே முடியாது. கர்த்தர் அதை ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்.

இப்படிப்பட்ட பிரச்சனைகளினால் பலராக சேர்ந்து சபை தொடர்பு இயலாத முறையில் வீடுகளில் கூடி ஜெபிக்கிறார்கள். ஆனால் அதுவே நாளடைவில் ஒரு **தனி சபையாக** மாறிவிடுகிறது. போதும் இப்போதே மாதம் மாதம் வீதிக்கு 4 சபைகள் பெருகிகொண்டே போகிறது.

## சிஎஸ்ஐ ஆயர்களுக்கு நன்றி:

தென்னிந்திய திருச்சபை (CSI)யின் அனைத்து ஆயர்களுக்கும் நன்றி. நவம்பர் 2017 ஜாமக்காரனில் சிஎஸ்ஐ சரித்திரத்தைப்பற்றி எழுதிய கட்டுரையை வாசித்த 24 டையோசிஸ்களின்(இலங்கை உட்பட) ஆயர்கள் பலர் என்னை வாழ்த்தியும் நன்றி கூறியும் எழுதிய கடிதங்கள் தொலைபேசி செய்திகள் அனைத்தும் என்னை வெகுவாக பெலப்படுத்தியது. என்னை மிகவும் சந்தோஷததுக்குள்ளாக்கியது.

சில ஆயர்கள் "நன்றி" என்ற வார்த்தையை உபயோகித்தது என்னை பிரமிக்க வைத்தது. எத்தனையாய் தன் சபையை அவர்கள் நேசிக்கிறார்கள் என்றும் அவர்கள் ஊழியம் செய்யும் சிஎஸ்ஐ சபைகள் கர்த்தரின் வசனத்தை விட்டு விலகிப்போய் கொண்டிருப்பதைக்குறித்து அவர்களும் உணர்ந்ததால் அல்லவா **சிஎஸ்ஐ வரலாறு** குறித்து நான் எழுதியதற்கு அவர்கள் "நன்றி" என்ற வார்த்தையை உபயோகித்து இருப்பார்கள். இப்படி **ஆவிக்குரிய ஆயர்கள்** சிஎஸ்ஐகுள்ளே ஆங்காங்கு இருப்பதால்தான் இன்று சிஎஸ்ஐ விசுவாசிகள் ஒரளவாவது தெய்வபயம் உள்ளவர்களாகவும் ஆவிக்குரிய வளர்ச்சியில் நாட்டம் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். அப்படியே சிஎஸ்ஐ சபைக்குள்ளே உள்ள **சபையின் நிர்வாகிகள்** பலரும் என்னை வாழ்த்தி **நன்றி தெரிவித்திருப்பது** இன்னும் என்னை தைரியப்படுத்தியது.

**அதில் சில ஆயர்கள் எனக்கு அறிவித்தது:** டாக்டர்.ஐயா **மார்டீன் லூத்தரைப்போல** கர்த்தர் உங்களை எழுப்பியிருக்கிறார். உங்களுக்கு பல புதிய எதிரிகள் சிஎஸ்ஐக்குளில் தோன்றுவார்கள் என்பதை நாங்கள் அறிவோம். உங்கள் கருத்துக்கு ஒத்துப்போகும் ஆயர்கள் பெரிய அளவில் இல்லாதிருந்தாலும் நாங்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்போம். உங்கள் உள்ளத்தில் உள்ள **சபை வைராக்கியம் வசன அடிப்படையில் எங்களுக்கும் உண்டு.** என்ன விதமான உதவிகள் வேண்டுமானாலும் உங்களுக்காக செய்ய நாங்கள் தயார். தைரியமாக தொடர்ந்து எழுதுங்கள். நாங்கள் **கேரளாவிலும் இருந்தாலும் எங்கள் மலையாள சிஎஸ்ஐ ஆயர்கள் ஒருமித்த கருத்துஉடைய பலர் கேரளத்தில் உள்ள பல டையோசிஸ்களில் உண்டு.** நாங்கள் அனைவரும் தொலைபேசியில் உங்களைக்குறித்து பேசிக்கொண்டபோதே நாங்கள் உங்களுக்காக ஜெபிக்க தொடங்கிவிட்டோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக என்று அவர்கள் குறிப்பிட்டது, கர்த்தருக்குள் என்னை திடப்படுத்திக்கொள்ள உதவியாக இருந்தது.

என்னோடு தொடர்புக்கொண்ட எனக்காக ஜெபித்த எல்லா **ஆயர்களுக்கும்** சிஎஸ்ஐ சபை (24 டையோசிஸ்) **விசுவாசிகள்,சபை நிர்வாக குழு** அனைவருக்கும் சிரம் தாழ்த்தி நன்றி கூறுகிறேன். உங்களுக்காக நான் ஜெபிப்பேன் என்றும் உறுதி கூறுகிறேன்.

## காரியத்தின் கடைதொகை:

சிஎஸ்ஐக்குறித்துள்ள விவரங்கள் எழுதிக்கொண்டிருக்கும் என்னை சிஎஸ்ஐயிலிருந்து நீக்க முயற்சிகள் பல வருடங்களாக நடந்துக்கொண்டிருப்பதை நான் அறிவேன். இப்போதும் அந்த முயற்சிகள் தீவிரமடைந்துள்ளது என்பதையும் நான் அறிவேன். இதுவரை என்னை நடத்தியவர் **உயிரோடு இருப்பதால்** எதைக்குறித்தும் கவலைப்படாமல் தொடர்ந்து கர்த்தர் எனக்கு அனுமதித்த பாதையில் என் ஆயுள் உள்ளவரை தொடருவேன். ஒரு கதவு அடைப்பட்டால் பல கதவுகளை திறப்பவர் நம் கர்த்தர். அப்படி கதவுகள் திறக்கப்பட்டவிட்டாலும் அனைத்து கதவுகளும் **அடைப்பட்டு போனாலும்** என் கர்த்தர் என்னை வித்தியாசமான ஊழிய வழியில் அழைத்துப்போவார் என்பது தான் என் பெலன், என் விசுவாசமுமாகும்.

கடைசியாக நம் **சிஎஸ்ஐ விசுவாசிகளுக்கும்**, நம் சிஎஸ்ஐ **ஆயர்களுக்கும் பிஷப்மார்களுக்கும்** நான் கூற விரும்பும் ஆலோசனை(கட்டளையல்ல) என்னவென்றால் ஒரளவு நம் சபைகளின் நிலையைக்குறித்து ஜாமக்காரனாய் அறிவிக்க வேண்டியவற்றை அறிவித்துவிட்டேன்.

இனி சிஎஸ்ஐ மற்றொரு பெரும் சவாலை சந்திக்கவேண்டியிருப்பதை எச்சரிக்கையாக அறிவிக்க பாராப்படுகிறேன். இன்று **பிசாசு** சிஎஸ்ஐ சபைகளுக்குள் **"ஜாதி"** என்ற பயங்கர ஆயுதத்தை கையில் எடுத்துள்ளான். இந்த ஆயுதம் நம் சபைகளை உடைத்துவிடும். நம் சபை மக்களின் ஐக்கியத்தை உடைத்துவிடும் அது நம் சிஎஸ்ஐ சபை அங்கத்தினர்களின் **குடும்பத்தையும் உடைத்து சிதைத்துவிடும்.**

**தலித்** என்றும் **மேல்ஜாதி,கீழ்ஜாதி** என்றும் எந்த ஊர்க்காரன் என்றும் கூறி இதன் அடிப்படையில் நம் சபையின் ஆணிவேர் ஆகிய **கிறிஸ்துவின் அன்பையும்,ஐக்கியத்தையும்** உடைக்கப்பார்க்கிறான். இந்த பிசாசின் புதிய திட்டத்தில் **ஆயர்களோ, பிஷப்மார்களோ, சபை நிர்வாகிகளோ** அதற்கு இசைவு கொடுக்காமல் சபையை காப்பாற்றுங்கள். நான் **கீழ் ஜாதிக்காரன்** என்பதால் **என்னை ஒதுக்கப்பார்க்கிறார்கள்** என்ற வார்த்தை ஒருவன் வாயிலிருந்து வந்தால் அவன் **உண்மை கிறிஸ்தவன் அல்ல.** கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டவார்கள் **அனைவரும் ஒருதாய் வயிற்றில் பிறந்தவர்கள்** ஆவார்கள். இதை செயலில் காட்டவே நம் கர்த்தராகிய **இயேசுகிறிஸ்து திருவிருந்து** என்ற சாக்கிரமந்தை நடத்தி காட்டி அனைத்தும் **இரண்டாம் வருகைவரை** கைக்கொள்ள சொன்னார்.

அதில் **ஒரு அப்பம் - ஒரு பாத்திரம்** என்று நம் ஐக்கியம் உடையாதபடி காப்பாற்ற அந்த ஏற்பாட்டை செய்தும் காட்டினார்.

ஆகவே **ஜாதி** என்ற வார்த்தையோ அதன் அடிப்படையில் எழும்பும் பிரச்சனைகளோ நம் சபைகளில் பிரவேசிக்காதபடி காப்பாற்ற வேண்டியது நம் **பிஷப்மார்கள் கைகளிலும்,ஆயர்மார்கள் கையிலும்** கொடுக்கப்பட்ட **பெரும் பொறுப்பு** ஆகும்.

இந்த **ஜாதி** பிசாசின் தந்திரத்தில் எந்த ஆயர்களும் விழுந்துவிடாதபடி அப்படிப்பட்ட எண்ணத்தில் ஆயர்கள் யாராவது அல்லது சபை நிர்வாகிகள் யாராவது செயல்பட்டால் இயேசுவை உண்மையாக புரிந்து நேசிக்கும் ஆயர்கள் யாவரும் அப்படிப்பட்டவர்களோடு ஐக்கியப்படாமல் அவர்களோடு **வாக்குவாதம்** செய்யாமல் அவர்களை ஒதுக்குங்கள். அப்படியாக உங்கள் ஆத்துமாவை நீங்கள் காப்பாற்றிக்கொள்ளுங்கள். **ஜாதி** என்ற ஆயுதத்தை கையிலெடுக்கும் யாரும் கர்த்தருடைய **இரண்டாம் வருகையில்** அல்லது தங்கள் மரணத்தின்போது கைவிடப்படுவார்கள்.

**ஜாதி** என்னும் **தோல்** உரிக்கப்படாத ஆடு பலிபீடம் வரை வந்து சேர்ந்தாலும் கர்த்தர் அதை அங்கீகரிக்கமாட்டார்.

**ஒரு காலத்தில் ஜாதி என்ற அடிப்படையில் வீட்டைவிட்டு வெளிவரமுடியாமல்,காலில் செருப்பு அணியாமல், அதைவிட பெண்கள் ஜாக்கெட் அணியக்கூடாது என்ற கடுமையான அடிமைத்தனத்திலிருந்து கர்த்தர் ஒரு குறிப்பிட்ட கூட்டத்தை மிஷனரிகள் மூலமாக விடுத்த அந்த கொடுமையான நாட்களை மறந்துவிடக்கூடாது.** அந்த மிஷனரிகள் கல்வியை கொடுத்து, அறிவுக் கண்களை திறக்க செய்து அவர்கள் உயர்ந்த கல்விபெற்று அந்த மாவட்டங்களின் சமுதாயத்தின் ஏற்ற தாழ்வுகளை உடைத்தெரிய காரணமானார்கள்.

அப்படிப்பட்டவர்களே தங்கள் முற்பிதாக்களின் ஆரம்ப கால சரித்திரத்தை மறந்து கிறிஸ்தவர்களாக பெயர்பெற்றும் சபைக்குள்ளேயே உள்ள **தாழ்ந்த ஜாதியில்** உள்ளவர்களை **அடிமைப்படுத்த** நினைப்பது நன்றியில்லாத செயலாகும். அதே சமயம் நான் **தாழ்ந்த ஜாதியை** சேர்ந்தவன் என்ற **இழிவான ஆயுதத்தை** கையில் எடுக்கும் எந்த **கிறிஸ்தவனும் தாழ்வுமனப்பான்மை** உள்ளவனாகவே காணப்படுவது கர்த்தரின் பார்வையில் **அருவருப்பாகும்.**

இந்தியாவில் மட்டுமே **ஜாதி பிரச்சனை**, வெளிநாடுகளில் **இனப்பிரச்சனை** என்று **பிசாசு** சபைக்குள் ஐக்கியத்தை உடைத்து நமக்குள்ளே கிறிஸ்துவின் அன்பை கெடுத்துப்போடுகிறான்.

வேதத்திலும் ஆரம்ப கால நூற்றாண்டு கிறிஸ்தவ சபைகளில் **இனப்பிரச்சனை, பாஷை பிரச்சனைகள்** உண்டானது. **ஆரியர்களின்** வரவுக்கு பிறகு இந்தியாவிலுள்ள பலர் முப்பதுமுக்கோடி தேவர்களை வணங்கினபடியால் அவர்களின் சாமர்த்தியமான ஏற்பாட்டின்படி **தொழிலின் அடிப்படையில் ஜாதிகளை** உருவாக்கி நம் **திராவிட பாரம்பரிய மக்களை** பிரித்து வைத்தார்கள். இவர்கள் எல்லாரையம் ஒன்றுப்படுத்தத்தான் **இயேசுகிறிஸ்து** தன்னை வெளிப்படுத்த சித்தமாகி **தன் சீஷர்களில்** ஒருவரை இந்தியாவுக்கு அனுப்பி அவர் மூலமாக கிறிஸ்தவர்கள் எழும்பினார்கள். அதன்பின் **மிஷனரிகள்** மூலமாக நம்மை ஒன்றுப்படுத்த நம் இயேசுகிறிஸ்து முயன்றார். ஆனால் ஆண்டவரின் **அந்த அன்பின் சித்தாந்தத்தை** முறியடித்து தன் ஆட்சியை **ஜாதி** என்ற பெயரில் சபைக்குள் கொண்டுவர **பிசாசு** முயலுகிறான். இதற்கு யாரும் துணைப்போகாதபடி நம் சபையை **ஜாதி** பிரச்சனையிலிருந்து விடுவிப்போம். பிசாசின் திட்டத்தை முறியடிப்போம். இதுவே சிஎஸ்ஐ சபைகளை குறித்த என் உள்ளத்தின் பாரம். இதை சிஎஸ்ஐயில் உள்ள என் வாசகர்களிடம் இறக்கிவைத்துவிட்டேன். இனி சிஎஸ்ஐ சபைகளைப்பற்றி நான் கூடுதலாக எதையும் எழுத விரும்பவில்லை.

நாம் **ஒன்றாக இருப்பதுபோல் இவர்களும் நம்மைப்போல் ஒன்றாக** இருக்க வேண்டிக்கொள்கிறேன் என்று இயேசு கூறியதுபோல கிறிஸ்துவின் **ஆசையை நிறைவேற்றும் சாட்சியுள்ள கிறிஸ்தவர்களாக நாம் சாட்சியுடன் வாழுவோம்** என்று கேட்டுக்கொண்டு இந்த ஆசிரியர் குறிப்பை ஜெபத்துடன் முடிக்கிறேன்.

## தமிழ்நாட்டில் மழை வெள்ளம்

2017 நவம்பர் மாதம் **சென்னை** மறுபடியும் மழை வெள்ளத்தால் வீடுகளில் தண்ணீர் புகுந்து அரசாங்கம் திறந்துகொடுத்த பள்ளிகளில் ஆலய வளாகங்களில் பிள்ளைகளுடன் தன் வீட்டு நாயும் சேர்ந்து சில நாட்கள் படுத்து உறங்கிய காட்சிகள் தமிழ்நாட்டை ஆள்பவர்களின் அலட்சியத்தையும், அகம்பாவத்தையும் கண்டு தமிழ்நாடு வெகுண்டது. ஏற்கனவே 2015ல் ஏற்பட்ட மழைவெள்ள பாதிப்பு, மரணஓலங்கள் யாவையும் கண்டோம். அதில் வீடிழந்த பலருக்கு இன்றும் வீடுஇல்லை, இழப்பீடு இல்லை, பொருள் இழந்து, வாழ்விழந்துப்போனார்கள். கடைகள், கடையில் உள்ள விற்பனை பொருட்கள் யாவும் அழிந்தது. பண வசதியுடன் வாழ்ந்த கடைக்காரர்கள் பலர் யாவையும் இழந்து இப்போது பரிதவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

மத்தியஅரசின் பினாமி அரசாக செயல்படும் இன்றைய தமிழ்நாட்டு அரசு செயல்படமுடியாதபடி மத்திய மந்திரிமார்கள் யாவரும் தங்கள் பதவியை தக்கவைத்துக்கொள்ள நீதிமன்றமே கதி என்று இருக்கிறார்கள்.

அரசாங்கம் ஸ்தம்பித்துப்போனது. உயர் அதிகாரிகள் மழை எச்சரிப்பை குறித்தும் ஏரிகள் உடையப்போகும் நிலை குறித்தும் போர்கால நடவடிக்கை எடுக்க நிதி ஒதுக்க வேண்டும் என்று முதல்வருக்கு இரண்டு மாதத்துக்கு முன்பே கடிதம்மூலம் அபாய அவசர அறிவிப்பை அனுப்பியும் முதல்வர் கையொழுத்து போடவில்லை.

முன்னாள் முதல்வர் மறைந்த ஜெயலலிதா அவர்கள் உயிரோடு இருந்தபோதும் இந்த நிலைதான் ஏற்பட்டது. ஏரி உடைந்தது. அதன்பின் கையெழுத்து போட்டார்கள். பெருத்த அழிவு ஏற்பட்டபின் பணம் கிடைத்து. அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுக்கமுடியும்?.

**இப்போதும் அந்த நிலை நீடிக்கிறது. மழை வந்து ஏரிக்கரை உடைந்தது. அடுத்து பெரும் ஆபத்து வரப்போகிறது என்று மீடியாக்களும், வானிலை அறிவிப்பும், அனைத்து TV சேனல்களும் அறிவிப்பு கொடுத்து எச்சரித்தது வெள்ளம் ஊருக்குள் புகுந்தது.**

முதல்வர் சேலம் வரவேற்புகளை முடித்து சென்னை வந்து சேர்ந்தபின் கையெழுத்து போட்டிருக்கிறார். இனி தூறு வார, உடைந்த கரைகளை செப்பனிட மறுபடியும் பணி டென்டர்இட்டு ஒப்பந்தக்காரர்கள் தங்கள் தொகையை அறிவித்து அதாற்கான நிதி கிடைத்தபிறகு கனரக வாகனங்களை ஏற்பாடு செய்வதற்குள் எத்தனை உயிர் பலி, எத்தனை நஷ்டங்கள், எத்தனைபேர் வீடு இழந்து என்னன்ன அழிவுகள் உண்டாகப்போகிறதோ!.

நான்கு நாட்கள் தொடர்ந்து பெய்த மழையால் **சென்னை** நகர வாசிகள் பயணிக்கும் பேருந்துகள், ஆட்டோக்கள், டேக்சிகள், மோட்டார் சைக்கிள்கள் யாவும் வெள்ளத்தில் மூழ்கி தண்ணீர் இன்ஜினில் ஏறி பழுதாகி வாகனங்கள் அங்காங்கே

நிற்கிறது. ரயில் நிலையத்தில் வந்திறங்கியவர்கள் இரண்டு நாட்கள் வீடு போக வழியில்லாமல் ரயில்வே ஸ்டேஷனில் குழந்தைகளோடு நிற்கும் காட்சியை TVயில கண்டபோது உயிருள்ள தெய்வமாகிய இயேசுவை ஆராதிக்கும் மனம் திரும்பின அனுபவம் உள்ள விசுவாசிகள் நாட்டை ஆளும் தீய சக்திகளை குறித்து கர்த்தரிடம் அழுது ஜெபிக்கவேண்டாமா?

நீங்கள் வெள்ளம் புகுந்த வீட்டில் இருப்பதாக கற்பனை செய்துபாருங்கள். கட்டில்கள் மிதக்கிறது. பாம்பு பூரான் வீட்டுக்குள் உலவுகிறது. உங்களை அந்த வீட்டில் வைத்துப்பாருங்கள். ரோ. 13:1-4 வரை வாசித்துப்பாருங்கள். **ஆளும் அதிகாரிகள்,மந்திரிகள் நற்கிரியைகளுக்கல்ல. துர்கிரிகைகளுக்கு பயங்கரமாக இருக்கிறார்கள்**. 1 தீமோ. 2:1-3. **கலகம் இல்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு (மந்திரிகளுக்காக) அதிகாரமுள்ள யாவருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல் களையும்(அதோடு) ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்** என்று நம் கிறிஸ்தவ வேதம் கட்டளையிட்டுள்ளது. எசேக்கியல் 22:30 நான் **தேசத்தை அழிக்காதபடிக்கு திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவும் தக்கதாக ஒரு மனுஷனை தேடுகிறதாக** வேதம் கூறுகிறது. மாதம் ஒரு முறை தன் பெயரை கூப்பிடமாட்டார்களா? துக்கம் சந்தோஷமாக மாறாதா என்று நாலுமாவடி திறப்பின் வாசலுக்கு சிறப்பு பங்காளர் ஏற்பாடு செய்யப்போகிறார்களே, தவிர அவரவர் இருக்கும் இடத்தில் இருக்கும் சபையில் வீட்டில் தனிப்பட்ட முறையில் ஆளுகிறவர்களுக்காக ஜெபிக்க ஆள் இல்லையே. ஆளுகிற அரசியல்வாதிகளைப்போலவே நம் சபைகளிலும் பல M.L.A., M.P.மார்கள் நிர்வாக கமிட்டிகளில் புகுந்து சபைகளும் பதவி மோகத்தால் நம் சபைகளை ஆளுகிறார்கள். அரசியல்வாதிகள் ஆதாயம் இல்லாமல் சபை பொறுப்புகளிலும் பங்கு கேட்பார்களா?. ஆகவே தமிழ்நாட்டை,இந்தியாவை நம் திருச்சபைகளை ஆள்பவர்கள் நிர்வகிப்பவர்களுக்காக மாதம் ஒருமுறையல்ல, ஆல்நைட் பிரேயரில் அல்ல, சபை ஜெப கூட்டங்களில் மட்டுமல்ல. அவரவர்கள் தனி ஜெபங்களில் தினசரி காலை, இரவு ஜெபிக்க கடமைப்பட்டுள்ளோம். ஜெபகுறிப்புகளை எழுதி வைத்து ஜெபியுங்கள். ஜாமக்காரன் வாசகர்களுக்காக பாரத்துடன் எழுதி எழுதி அறிவிக்கிறேன். நான் குறிப்பிட்டபடி ஒவ்வொரு வாசகர்களும் ஜெபத்தால் கர்த்தர் நெற்றியில் ஒரு இரகசிய அடையாளம் இடுவார். அந்த அடையாளம் உங்களை நாட்டின் பஞ்சத்திலிருந்தும், வெள்ள அழிவுகளிருந்தும், கலிகாலங்களிலிருந்தும் உங்களை காப்பாற்றும் . எசே. 9:4.

## கொள்ளை நோய்கள்:

**சிக்கன் குனியா** வியாதியின் காரணமே கண்டுபிடிக்க முடியாத வியாதிகளில் ஒன்று சிக்கன் குனியா. இந்த வியாதியில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் நிலையே தலைகீழாக மாறி வாழ்க்கையை இழந்தவர்,தொழில் செய்யமுடியாமல் முடங்கிப்போனவர்கள் கேரளா மாநிலத்தில் ஏராளம். **டெங்கு காய்ச்சல்** அடுத்து மக்கள் தாக்கிய புதிய கொள்ளை நோய் டெங்கு ஜுரம். இது பகல் நேரத்தில் கடிக்கும் ஒரு கொசுவினால் பரப்பப்படுகிறது.

இந்த ஆளைக்கொல்லும் வைரஸ் 2005ல் சிங்கப்பூரில் முதலாவதாக பரவி பெரும் பாதிப்பை உண்டாக்கியது. அதன்பின் 2009ல் இலங்கைக்கு பரவியது. 2012ல் தான் இந்தியாவில் முதலில் தென்இந்தியாவில் **திருநெல்வேலி, தூத்துக்குடி** மாவட்டங்களில் பரவி பலருக்கு மரணத்தை உண்டாக்கியது.

அரசாங்கம் இதை மக்களுக்கு மறைக்க முயன்றது. அரசாங்க ஆஸ்பத்திரிகளிலும், **தனியார் ஆஸ்பத்திரிகளிலும்** அங்கு சேர்க்கப்பட்ட வியாதியஸ்தர்கள் டெங்குவினால் தான் மரித்தார்கள் என்பதை **வெளியிடாதிருக்க** இரகசியமாக கட்டாயப்படுத்தியது. பல குடும்பங்களுக்கு வியாதியஸ்தர்கள் டெங்குவால் மரித்தார்கள் என்பதை கூறாமல் மறைத்தார்கள்.**டெங்குவால்** பாதிக்கப்பட்டவர்களுக்கு சில நாட்களில் இரத்தம் கிடுகிடுவென்று குறையும் அதன்பிறகு அதை சரிப்படுத்துவது கடினம். அதுவே மரணத்தை உண்டாக்கும். ஆகவே காய்ச்சல் வந்தவுடனே தாமதப்படுத்தாமல் **இரத்த பரிசோதனை** செய்துகொண்டு **டெங்கு** என்பதை கண்டுபிடித்துவிட்டால் அதற்கான சிகிச்சையை ஆரம்பகட்டத்திலேயே ஆரம்பித்து சுகமாக்கிவிடலாம்.

**பப்பாளி இலை பச்சையாக சாப்பிட வையுங்கள்.** இது சிவப்பு அணுக்களை சீக்கிரம் உற்பத்தியாகும். இப்படிப்பட்ட காரணம் கண்டுபிடிக்கமுடியாத பலவிதமான கொள்ளை நோய்கள் நம் மக்களை தாக்க ஆரம்பித்துவிட்டது. இதுவும் உலகத்தின் முடிவுக்கான அடையாளங்களில் ஒன்று என்று இயேசு கூறினார்.மத் 24 மாற்கு 3, மத் 21 அதிகாரங்களில் பார்க்கலாம்.

கர்த்தருடைய கோபம் விக்கிரக ஆராதனைக்காரர்மேல் வரும்போது கர்த்தருடைய மக்களும் குறிப்பாக கிறிஸ்தவ சபை மக்களும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே சபைகளில் உபவாச ஜெபத்தை நடத்தி எல்லாருக்காவும் இந்தியா முழுவதும் இலங்கை முழுவதும் உள்ள மக்கள் கொள்ளை நோயிலிருந்து காப்பாற்றப்படவும் வேண்டும் ஜெபிப்பது மிக அவசியம்.

**என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள், தங்களை தாழ்த்தி ஜெபம் பண்ணி, என் முகத்தை தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டு மனந்திரும்பினால் அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான்(கர்த்தர்) கேட்டு அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தை கொடுப்பேன்** என்று கூறினார்.( 2 நாளா 7:14).

வாசகர்கள் **வங்கி வழியாக** ஆன்லைன் மூலம் அனுப்பிய **காணிக்கைகள்** யாவும் இந்த பத்திரிக்கை எழுதிக்கொண்டிருக்கும் 2017 நவம்பர் 6ம் தேதி வரை என் அக்கவுண்ட்டில் வந்து சேர்ந்தது என்பதை அறிவிக்கிறேன். இந்த ஊழியத்தில் பங்கு வைத்த அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

2017ம் **டிசம்பர் மாதம்** வரை நம் யாவரையும் வழுவாமல் காத்த கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் உங்கள் யாவருக்கும் நாமத்தில் வாழ்த்து கூறுகிறேன்.

**கர்த்தரின் பணியில்**

**டாக்டர்.புஷ்பராஜ்**

## விமர்சன கடிதம்:

**நெல்லை முன்னாள் பிஷப் அவர்களின் துணைவியார் கடிதம் - ( E-Mail):**

**You are answerable to God not Man All you wrote in Jamakkaran in false only. can't you enquire about this. - Mrs. christilda christdoss**

# அவிசுவாசிகளாகிய விசுவாசிகள்

**(பழம்பெரும் ஊழியரும், பிரபல கன்வென்ஷன் செய்தியாளருமான சகோ.எம்.ஜீ. செரியானின் பிரசங்கம்)**

மேலே வாசித்த தலைப்பின்படியும் இருக்கிறார்களா **விசுவாசிகள்?** அவர்கள் விசுவாசிகளாயிருந்தால் எப்படி **அவிசுவாசிகளாயிருப்பார்கள்? அவிசுவாசிகளாக** இருப்பின் அவர்கள் விசுவாசிகளா? கண்டிப்பாக யாரும் இத்தகைய கேள்வியை எழுப்புவர். ஆனால் **அவிசுவாசிகளாகிய விசுவாசிகள்** பலர் உண்டு என்பது மறுக்கமுடியாத ஓர் உண்மையாகும். வேதாகம திருமறையில் இருந்து சான்றுகள் தருகிறேன்.

நம் ஆண்டவர் இவ்வுலகில் வாழ்ந்திருந்த நாட்களில் அநேகர் அவரை விசுவாசித்தனர் என நற்செய்தி நூல்களில் நாம் வாசிக்கிறோம். (யோவான் 8:30) யுதர்களில் அநேகர்போய் **இயேசுவினிடத்தில் விசுவாசம்** வைத்தனர் என யோவான் 12:10ல் காண்கிறோம். விசுவாசித்தவர்கள்தானே விசுவாசிகள், அத்தைய விசுவாசிகளுடன் இயேசுகிறிஸ்து நிகழ்த்திய ஓர் **உரையாடலையும்** அதனால் நிகழ்ந்த **விளைவுகளையும்** யோவான் 8:31-49 வரையிலுள்ள வேத வாக்கியங்களில் உள்ளன. தம்மை விசுவாசித்த யூதர்களுடன் இயேசு நீங்கள் என் போதனையில் நிலைத்திருந்தால் என் சீடர்களாயிருப்பீர்கள். உண்மையும்(சத்தியம்) அறிவீர்கள். உண்மை(சத்தியம்) உங்களை விடுதலையாக்கும் என்றார். அந்த விதமான உபதேசம் வார்த்தைகள் விசுவாசிகளுக்கு அது பிடிக்கவில்லை.

அவர்கள் சொல்லினர் நாங்கள் **ஆபிரகாமின்** வாரிசுகளாயிருக்கிறோம். நாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கும் அடிமைகளாய் இருக்கவில்லை. ஆனால் அப்படிப்பட்ட அவர்கள் **பாவம் செய்கிறவர்களும்** பாவத்துக்கு **அடிமைகளுமாவர்**கள் என்று ஆண்டவர் அவர்களை புரியவைக்க முயன்றார். அவர்களோ அதனை ஒத்துக்கொள்ளவில்லை. தாங்கள் **ஆபிரகாமின்** வாரிசுகளே என்கிற முழக்கத்தில் அவர்கள் உறுதியாய் நின்றனர்.

அப்பொழுதுதான் நீங்கள் பிசாசு என்னும் **தகப்பனின் பிள்ளைகள்** எனவும் நீங்கள் உண்மையில் என்னை விசுவாசிப்பவர்கள் அல்ல எனவும் அந்த விசுவாசிகளை நோக்கி கர்த்தர் சொல்ல நேர்ந்தது. தங்களுடைய **தகப்பனார்** என அவர்கள் **பெருமை பாராட்டுகின்ற ஆபிரகாமை** குறிப்பிட்டு அந்த ஆபிரகாம் பிறப்பதற்கு முன்னமே இருந்தவரும் இப்போது இருக்கிறவரும் நான் தான். என்(இயேசு) என கூறுகையில் தம்மிடம் விசுவாசித்தவர்களாகிய அந்த யூதர்கள் செய்தது என்ன? **தன்மேல் எரிய கற்களை** எடுத்தனர். இவர்கள்தான் **அவிசுவாசிகளாகிய விசுவாசிகள்** என்று கூறுகிறேன்.

பாவத்திலிருந்து **விடுதலைபெற மனமில்லாத விசுவாசிகள்,** அவர்களின் பாரம்பரிய விசுவாசத்தை தொட்டாலே போதும். இயேசுவுக்கு நேராக அவர்கள் கற்களை எடுப்பார்கள். அப்படிப்பட்ட விசுவாசிகளும் சேர்ந்து அல்லவா இயேசுவை சிலுவையில் அறைந்தனர்.

## இனியும் வேதத்தில் மற்ற பகுதிகளில் இருக்கிற அவிசுவாசிகளாகிய விசுவாசிகள் பற்றிய சான்றுகள்:

**அப்போஸ்தலருடைய நடபடிகள்** எட்டாம் அதிகாரத்துக்கு வாருங்கள் அங்கேயும் ஒரு மனிதன் உண்டு. இந்த சீமோனும் இயேசுவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றான். (அப் 8:13) ஆனால் அவனைக்குறித்து பின்பு ஒரு சந்தர்ப்பத்தில் பேதுரு கூறியது நீ உன் துர்குணத்தை விட்டு மனந்திரும்பவேண்டும் என்றாகும். இவன் தன் துர்குணத்தைவிடாமலும் மனந்திரும்பாமலும் இயேசுவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்ற விசுவாசி எப்படி....? இவனை விசுவாசி என்று இதுவரை கூறினார்கள். இப்பொழுது புரிகிறது அல்லவா **அவிசுவாசிகளுமாகிய விசுவாசிகள்** என்பவர்கள் சபையில் உண்டு என்று. அப்போதலர் தங்கள் கைகளை வைத்ததினால் பரிசுத்தாவி தந்தருளப்படுகிறதைக்கண்டு அந்த ஈவு தனக்கும் கிடைக்க **லஞ்சத்துடன்** அவன் அப்போஸ்தலரை அண்டினான். அவர்கள் எல்லோரும் பணத்திற்காகவே இவ்வூழியத்தை செய்கிறார்கள் என்றுதான்அவன் புரிந்துவைத்திருந்தான். அவனுங்கூட அதே ஊழியம் செய்து பணம் சேர்த்துக்கொள்ளும் பொருட்டே **இயேசுவை விசுவாசித்து ஞானஸ்நானம்** பெற்றுக் கொண்டான். ஆனால் அதுவன்றி அவனது வாழ்க்கையில் எந்தவித மாறுதலும் நேரவில்லையே. இப்படித்தான் சரியான உபதேசமின்றி ஆயிரக்கணக்கில் ஞானஸ்நானம் கொடுத்து சபை அங்கத்தினரின் எண்ணிக்கையை அவர்களிடமிருந்து தசம பாகத்தை பிடுங்க சில சபைகளில் இப்படிபட்டவர்களை அங்கத்தினராக்குகிறார்கள்.

**யாக்கோபின்** நிரூபத்தில் செயலற்ற **விசுவாசம் செத்தது** என்று சொல்லப்பட்டுள்ளது. (யாக். 2:20) **ஆவியில்லாத சரீரம்** செத்ததாய் இருக்கிறதுபோல செலற்ற விசுவாசமும் செத்ததுதான். (வசனம் 26) இந்த செயலற்ற **செத்த விசுவாசத்தை** அறிக்கை செய்து **ஞானஸ்நானம்** பெற்றவன்தான் அப்போஸ்தலருடைய நடபடிகைகள் எட்டாம் **அதிகாரத்தில்** வரும் மாய வித்தைகாரனாகிய **சீமோன்.** அத்தகைய **சீமோன்கள்** இன்றைக்கும் நம் சபைகளில் உண்டு.

நீங்கள் **விசுவாசிகளானபோது பரிசுத்தாவியை** பெற்றீர்களா? என்று பவுலடியார் எபேசுவிலுள்ள சில சீடர்களிடத்தில் வினவினார். (அப். 19:2) பரிசுத்தாவி உண்டென்பதை நாங்கள் கேள்விபடவில்லை என்று அவர்கள் பதிலுரைத்தனர். அப்போதுதான் அவர்கள் உண்மையில் **விசுவாசிகளே அல்ல** என்று பவுலடியாருக்கு தெரியவருகிறது. ஆனால் பெரிய விசுவாசிகள் என்று நம்பிவிடுகிற அளவில் அவர்களுடைய அணுகுமுறை இருந்தது. அவர்கள் சீடர்கள் என்று அறியப்பட்டனர். ஆனால் அவர்களுக்கு **பரிசுத்தாவி** கிடைக்கவில்லை. ஏனெனில் அவர்கள் **இயேசு கிறிஸ்துவை**குறித்து அறிந்து கொள்ளவோ விசுவாசிக்கவோ செய்யவில்லை. பரிசுத்தாவி இதயத்தில் வாசம் பண்ணவோ செயல்படவோ இல்லையெனில் விசுவாசி என்று ஒருவன் அழைக்கப்பட்டாலும் அப்படிப்பட்டவர்கள் அவிசுவாசிகளாகிய விசுவாசிகள் எனப்படுவார்கள்.

தேவனுடைய குமாரனை தாங்களே மறுபடியும் **சிலுவையில் அறைபவர்களும் அவமானப்படுத்துகிறவர்களும் மனம்திரும்புவதற்கு** ஏதுவாய் மறுபடியும் தங்களை புதுப்பிக்கும் வாய்ப்பை இழந்தவர்களுமாகிய விசுவாசிகளின் கூட்டத்தைக்குறித்து **எபிரேய நிரூபம்** 6ம் அதிகாரத்தில் பார்க்கிறோம். 6:4-8. இப்படிப்பட்டவர்களையும் அவிசுவாசிகளாகிய விசுவாசிகளின் கூட்டத்தில் சேர்க்கலாம். அவர்களைக்குறித்து கூறுகையில் ஒரு தரம் **பிரகாசிபிக்கப்பட்டவர்கள்.** பரம ஈவை ருசி பார்த்தவர்கள், பரிசுத்தாவியை பெற்றவர்கள்.தேவனுடைய நல்ல வார்த்தையையும். இனிவரும் பெலன்களையும் ருசி பார்த்தவர்கள் என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது அப்படிப்பட்ட இவர்களை **விசுவாசிகள் அல்ல** என்று யார் கூறுவர்?.

ஆனால் அவ்வளவாய் வந்த பின்னரும் **பின்வாங்கிபோனவர்களே** அவர்கள். அடிக்கடி பெய்கிற மழையை குடித்தும் பயிரிடுகிறவனுக்கு ஏற்ற பயிரை முளைப்பிக்காமல் முட்செடிகளையும் முள் பூண்டுகளையும் முளைப்பிக்கிறவர்கள்தான் அவர்கள். பாவத்தை குறித்து உணர்வும் இரட்சிப்பை குறித்து அறிகிற அறிவும் பெற்றுக்கொள்ளும் வகையில் பரிசுத்தாவியானவரின் கிரியை இதயத்தில் நடைபெற்றது. இவர்கள் இரட்சிப்பின் சந்தோஷத்தை பட்டறிகின்ற தேவபிள்ளைகளோடு ஒருமித்து வாழ்ந்து சந்தோஷத்தை ருசி பார்த்தவர்கள் பரலோகத்தின் படிக்கட்டுவரை வந்த பின்னரும் உள்ளே நுழையாமல் பின்வாங்கிபோனவர்கள். அத்தையோருக்கு ஒரு நல்ல சான்றே யூதாஸ்கோரியோத்தான் இவன் **அவிசுவாசியான விசுவாசி.**

**நான் ஒருகாலும் உங்களை அறியவில்லை** என்ற கர்த்தரால் கூறப்படுகிற வேறு ஒருசாரார் உள்ளனர். மத். 7:21-23 அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலேயே **தீர்க்கதரிசனம்** உரைத்தவர்கள்தான். **பிசாசுகளை துரத்தினவர்கள்தான் அற்புதங்களை** செய்தவர்கள்தான் அவர்களை விசுவாசிகள் என்றல்லவா உலகத்தினர் புரிந்துவைத்திருந்தனர். ஆனால் கர்த்தரோ அவர்களை ஒருகாலும் அறியவில்லை என்கிறார். மேலும் அவர்களை அக்கிரம **செய்கைகாரர்களாகவே கர்த்தர்** காண்கிறார். கர்த்தரை சரியாக அறியாத கர்த்தருடைய ஊழியர்கள் மனவாளனை அறியாத மனவாட்டி ஆகும். இவர்களும் **அவிசுவாசிகளாகிய** விசுவாசிகள் ஆவார்கள்.

❖ இன்னும் இக்கூட்டத்தரில் அநேகர் உள்ளனர். **எல்லா சபைகளிலும் உள்ளனர்.** அன்மையில் நான் வாசித்த கதை ஒன்று என் நினைவில் மிளிர்கின்றது. ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு கிராமத்தில் தாளவொன்னாத பசியுடனும் தாகத்துடனும் பயணி ஒருவன் சென்றுக்கொண்டிருந்தான். பசியாற்ற போதுமான ஒரு இடத்தையும் அவனால் பார்க்க இயலவில்லை. கடைசியில் ஒரு கடையின் முன் ஒரு விளம்பர பலகையை தொங்கவிட்டிருப்பதை கண்ணுற்றான் சூடான கேக் தயார் என்று எழுதியிருந்தது. ஆசையோடு உள்ளே நுழைந்தான். அப்போதுதான் அவனுக்கு ஒரு காரியம் புரிந்தது. அது ஒட்டல் அல்ல. அது **விளம்பரங்களை** எழுதுகிற ஒரு விளம்பர கடை என்று. சூடான கேக் விற்பனை செய்கிற ஒரு கடையின்முன் தொங்கவிடுவதற்காக விளம்பர பலகையை எழுதி **உலரும்படி** வைக்கப்பட்டிருந்ததுதான் அது. இன்று சிலர் தாங்கள் பெற்றுள்ள விசுவாசிகள் என்ற பெயரும் இவ்வண்ணம்தான் இருக்கிறது. **உள்ளத்தின் அனுபவம் அல்ல** வெளியே தென்படுவது **விசுவாசிகள்** என்கிற ஒரு தொங்கு பலகையை மட்டும் .

இந்நிலையிலுள்ள **அவிசுவாசிகளாகிய விசுவாசிகளை கொண்டு** இன்றைய பல சபைகளின் சூழ்நிலைகள் மாசுபடிந்துள்ளன. ஈடேற்றம் பெறுதல் **மறுபடியும் பிறக்குதல்** விசுவாசித்தபின்னர் உள்ள ஞானஸ்நானம் போன்ற அடிப்படைபோதனைகளை கற்பிக்கின்ற சபைகளில் பிறந்தவர் பெரும்பாலும் 15-20 வயதிற்குள் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றிருப்பார்கள். ஆனால் அவர்கள் மெய்யாகவே பாவத்தை குறித்து **உணர்த்தப்பட்டனரா? உண்மையாக பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு இவர்கள் மறுபடியும் பிறந்தனரா? விசவாச** வாழ்கையின் **நடைமுறை செயல்கள்** அவர்களிடம் தென்படுகிறதா? கர்த்தர் அவர்களை அறிகின்றாரா? யாருக்கும் தெரியும்? யாருக்கு தெரியவேண்டும். இத்தகைய மெய்மிகளுக்கு கிடைப்பது விலையில்லாமல் உதட்டளவில் உள்ள விசுவாசமும் ஞானஸ்நாமும் அல்லவா? இப்படிப்பட்ட பொய் விசுவாச ஞானஸ்நானம் இந்த நாட்களில் அதிகமாக நடந்தவண்ணம் இருக்கிறது. **அவிசுவாசிகளாகி விசுவாசிகள்** என்று அழைக்கப்படுகிற இவர்கள் இன்று எங்கும் நிரம்பிவிட்டனரே! இன்றைய சபைகளின் பல பிரச்னைக்கும் இவர்கள் அல்லவா காரணம். நாங்கள் இங்கே எழுதுவது உண்மையல்லவா? யோசித்துப்பார்ப்பீர்களா? சபை மக்கள் ஒவ்வொருவரையும் இவற்றை யோசிக்க ஆலோசனை கூறுவீர்களா?.

# இயேசுகிறிஸ்து மனிதனா? தெய்வமா?

இயேசுவும் சீடர்களை பார்த்து இப்படி கேட்டார் மனுஷ குமாரனாகிய என்னை **ஜனங்கள்** யார் என்று சொல்லுகிறார்கள்? நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள். என்று கேட்டார்.

அதற்கு **பேதுரு** அவர்கள் எப்படியெல்லாம் சொல்லுகிறார்கள் என்பதையும் தான் என்ன நினைக்கிறேன் என்பதையும் நீர் ஜீவினுள்ள தேவனுடைய கிறிஸ்து என்ற வார்த்தையினால் அறிவிக்கிறான்.

இன்றும் சிலர் **இயேசுவும் மனிதன்தான்** என்றும் அநேகர் சாதாரண மனித பார்வையில் அல்லது கண்ணோட்டத்தில் இயேசுவை கணித்துப்பார்த்து தங்கள் ஆன்ம மீட்பை இழந்துவிடுகிறார்கள். பேதுருவின் ஆழ்ந்த பார்வைதான் நமக்கு அவசியம். இயேசுவும் **இந்த கேள்வியை கேட்கும்போதே** மக்கள் தங்கள் பார்வையில் கணித்து கூறும் பதிலின் அடிப்படையில் (மனுஷ குமாரனாகிய என்னை) என்று கேட்டார். ஆனால் **பேதுருவோ** அப்படியல்ல. **நீர் ஜீவனுள்ள தேவனுடைய கிறிஸ்து** என்றான்.

இயேசு பூமியில் இருந்த நாட்களில் மனித சரீரம் அவருக்கு இருந்தது. மனிதனாகத்தான் பிறந்து வாழ்ந்தார். ஆனால் அவர் **செய்தது போல, நடந்ததுபோல, பேசியதுபோல ஒருவனும் அன்றும் - இன்றும் - என்றும்** செய்ததில்லை. மனிதன் என்று கூறினால், இவரை போல் இதுவரை **ஒரு மனிதனும்** சீரரத்தில் இல்லையே. ஏன் இயேசு **ஒரு பாவமும் அற்றவராக** இருந்தாரே. **அற்புதமூர்த்தியாக** இருந்தாரே **வல்லமையான செயல்கள்** இருந்தனவே. **கடலின்மேல்** நடந்தாரே. மேலும் நம்மை மீட்க வந்த இறைவனாக மனித வடிவில் இயேசு வந்துள்ளார் என்பதை ஏற்றுக்கொள்ள மனிதன் தடுமாறுகின்றான். அதே நேரம் சரித்திர சான்று இல்லாத கற்பனை கதைகளில் (புராணங்களில்)கூறப்பட்டுள்ள கற்பனை நபர்களை மட்டும் இறைவனுடைய அவதாரம் என்று ஏற்றுக்கொண்டு ஏமாறுகிறானே? எவ்வளவு பரிதாபம், எவ்வளவு குருட்டுத்தனம்.

இயேசு மனித வடிவில் தோன்றின **சர்வலோகத்தின் தேவன்** எல்லாம் **அவராலும் அவருக்கென்றும்** அவர் மூலமும் உருவானது ஆகும். இவரே **மெய்யான தேவனும் நித்திய ஜீவனும்.** இவர் **நேற்றும் - இன்றும் - என்றும் மாறாதவர்.** இவரே **வாசலும் வழியும் சத்தியமும்** ஜீவனுமானவர். இவரே சிருஷ்டி கர்த்தர். உரிமைக்காரன். இவரே துவக்கமும் முடிவுமானவர். ஆதிகாரனராகிய மூலக்கடவுள் நித்தியவாசியாகிய ஏக சக்ராதிபதி இயேசுவாக இப்பூமியில் பிறக்கும் முன்பே ஆதிமுதல் இருந்தவர். மனிதனுக்காக மரித்தும் மீண்டும் உயிர்தெழுந்தவர். இப்போதும் உயிரோடிருக்கிறவர். எபி. 7:25

இயேசுகிறிஸ்து முப்பத்தி மூன்றரை வருடங்கள் மனிதவடிவில் இறைவனாக தோன்றினார். அதற்கு முன்பும் பின்பும் என்றும் **இறைவனாக இருக்கிறார்** என்று அறிந்துகொள்வோமாக. இதோ மரித்தேன். ஆனால் **சதா காலமும் உயிரோடே இருக்கிறேன்.** நானே கர்த்தர் வேறெருவரும் தெய்வம் இல்லை என்று அவர் கூறினார்.

**அவர் மனிதன் அல்ல அவர் தெய்வம் என்பதற்கு சில சான்றுகள்.**

1) மனிதன் பிறக்கும் முன்பே அவன் வாழ்வை பற்றி முழுவதும் சொல்லப்படமுடியாது. ஆனால் இயேசு கிறிஸ்து பிறக்கும்முன்பே அவர் வாழ்வு, மரணம் உயிர்தெழுதல் ஆகிய விபரங்கள் முழுவதும் ஏற்கனவே யாராலும் சொல்லப்படமுடியாது. ஆனால் இயேசுகிறிஸ்துவைப்பற்றி மட்டும் அவர் பிறக்கும் முன்பே அவர் வாழ்வு முழுவதும் ஏற்கனவே பல ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டுள்ளது. ஆதாவது இயேசு பிறப்பதற்கு 400 ஆண்டுகளுக்கு முன்பே அவர் பிறக்கப்போவது குறித்து தீர்க்கதரிசனமாக அறிவிக்கப்பட ஆரம்பித்துவிட்டது. இதுபோல உலகில் எந்த ஒரு மனிதனுக்காவது நடக்குமா?.

2) **தாயும் தகப்பனும் கூடிய சரீர சேர்க்கையால் ஒரு மனிதன் பிறக்கிறான். இது இயற்கை.** ஆனால் இயேசு கிறிஸ்து மட்டும் கல்யாணம் செய்யாத ஒரு கன்னியிடத்தில் **புருஷனுடைய சரீர உறவின்றி** (பரிசுத்த ஆவியினால்) உருவாகி பிறந்தார். தகப்பனில் சரீர உறவின்றி மனிதன் பிறப்பானா? (அப்படி பிறந்துவிட்டதினால் மனிதன் என்று கூறுவது தவறு. நம் பாவம் தீர்க்கவே வந்து பிறந்தார். ஆனால் பிறக்கும் முன்பே அவர் என்றும் இருந்த **அனாதி தேவன்** என்று வேதம் கூறுகின்றது.

3) **எந்த மனிதனும் பாவம் செய்கிறான் பொய்யன் என்று வேதம் கூறுகின்றது.** ஆகவே **மனிதன் பாவ விமோசனம் தேட வேண்டியவனாகிறான். ஆனால் இயேசு கிறிஸ்து மட்டும்** பாவமில்லாமல் **பரிசுத்தமாக** வாழ்ந்து காண்பித்தார். (என்னில் பாவம் உண்டு உங்களில் யார் கூற முடியும் என்று சவால்விட்டு பொதுமக்களை பார்த்து கேட்டார். ஒருவரும் கூற முடியவில்லை) நான் பரிசுத்தர் இதற்கு நீங்களும் பரிசுத்தமாக இருக்கவேண்டும் என்று இவரால் மட்டுமே மற்றவர்களுக்கு குறிப்பாக தன்னை நேசிக்கும் கிறிஸ்தவர்களுக்கு கூற முடிகிறது.

4) மனிதன் **வியாதிகளை** நீக்க ஆராய்ச்சி செய்து கண்டறிந்த மருத்துவத்தின் மூலம் வியாதியை சுகமாக்க முயலுகிறான். ஆனால் இயேசு கிறிஸ்துவோ அவர் தொட்டவுடன் அல்லது சொன்னவுடன் வியாதிகளும் சுகமாகிறது. குருடு, செவிடு, முடம், குஷ்டம், ஊமை முதலியவைகளும் சுகமாயின (உலகில் எந்த மனிதனுக்காவது சொல்லுக்கும், தொடுதலுக்கும் இப்படிப்பட்ட வல்லமை உண்டா?

5) மனிதனால் வெல்லமுடியாதது **மரணம்,** சாவு, வருகையில் அதற்கு தப்ப வழி காணாதவன், ஆனால் இயேசு **மரித்தவர்களையும்** உயிரோடே எழுப்பினார். தானும் மரித்து மூன்றாம் நாள் உயிரோடே வந்தார்.

6) மனிதன் எவனுக்கும் ஏதாவது வியாதி உண்டு. ஆனால் **இயேசு கிறிஸ்துவுக்கு** வியாதி ஒன்றும் வந்ததில்லை.

7) **மனிதன் எவனும்** கடல்மேல் **நடக்கமுடியாது.** (சில நிமிட பயிற்சியினால் நடந்துகாட்டலாம்) இயேசு் கொந்தளிக்கும் கடல் மேல்நடந்து சென்றார். மேலும் **கடலையும், காற்றையும்** இறையாதே , அமைதியாயிரு என்று ஒரு மனிதனுக்கு கட்டளையிடுவதுபோல அதட்டினார். அவைகளும் **கீழ்படிந்து அடங்கின.** இயற்கைகளை உருவாக்கினவர். இயற்கைகளின்மேல் அதிகாரம் உள்ளவராக இருப்பதை அறியமுடிகிறது.

8) **மனிதன் எவனும்** இருக்கும் இடத்தில் மறைந்துவிடமுடியாது. மேஜிக் செய்பவன் தன் பயிற்சியினால் சில நிமிடங்கள் அப்படி செய்கிறான். ஆனால் இருந்த இடத்தில் இருந்து மறைந்து அதே சமயம் வேறொரு இடம் சென்றுவிட்டார் என்பதை பல முறை வேதத்தில் பார்க்கிறோம். மேஜிக் செய்பவன் அந்த மேடையில் மட்டும் இருட்டை உருவாக்கி அதில் தன்னை மறைத்து மக்களை மகிழ்வித்து காசு சம்பாதிக்கிறான். தவறு செய்துவிட்டு போலீஸில் அகப்பட்டுகொள்கிறான். ஆனால் ஜெயிலிலிருந்து ஏன் மறைய முடியவில்லை இவன் மனிதனாய் இருப்பதால் மறையமுடியவில்லை.

9) **மனிதன் எவனும்** பூட்டிய வீட்டிக்குள் கதவை திறவாமல் வீட்டில் புகுந்து காட்சி அளிக்கமுடியாது. ஆனால் இயேசு அப்படி செய்தார்.

10) வித்தை செய்பவன் அற்புதங்களை செய்வதுபோல மக்களை ஏமாற்றி மனிதன் **பணம்** பறிக்கிறான். ஆனால் இயேசுகிறிஸ்து தான் எவரிடமும் ஒரு அற்ப பொருளைக்கூட வாங்கிக்கொண்டு அதற்கு அற்புதம் செய்யவில்லை. மாறாக மக்கள் மீது **மனதுருகி** அவர்களை **தொட்டு** அவர்கள் **பிணி தீர்த்தார். நன்மை செய்கிறவராக** சுற்றித்திரிந்தார். பணத்துக்காக அல்ல, புகழுக்காக அல்ல, அவர் தெய்வமானதால் தன் மக்கள் மீது கொண்டு இரக்கத்தால் அப்படி செய்தார்.

11) மனிதன் **துணை தேடி திருமணம் புரிகிறான் அல்லது சரீர சந்தோஷம் நாடி மோகம் கொள்கிறான். மற்ற மத கிரந்தங்களில் கடவுள் பூலோகம்** வந்து பெண்ணை திருடிக்கொண்டுப்போவதை அறிகிறோம். குரானை எழுதிய முகம்மது நபிக்கு 28 மனைவிகள், இந்து தெய்வங்களுக்கு எண்ணில்லா மனைவிகள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ பரிசுத்தமாக வாழ்ந்து காட்டினார். இயேசுகிறிஸ்து சாவதற்காகவே திட்டமிட்டு உலகில் பிறந்தார். உலகை சுகிப்பதற்காக அல்ல. தன் **முதலாம் அற்புதத்தை திருமண வீட்டில்தான்** செய்ய ஆரம்பித்தார்.

12) **தன்னை தேவன்** என்று **எந்த மனிதனும்** கூறி அதனை நிரூபித்ததில்லை. ஆனால் இயேசு **தன்னை தேவன்** என்று பகிரங்கமாக கூறினார். அதற்கு ஆதாரமாக இறைவன் செய்யும் வல்லமை அனைத்தையும் **தன் வாழ்வில் செய்து நிருபித்தார்.**

13) **எந்த மனிதனையும்** பிசாசுகள் கண்டு நடுங்கி நீர் ஜீவனுள்ள **தேவன் குமாரன்** என்று கூறி ஓடியதில்லை. எல்லா பிசாசுகளும் அவரை கண்டு நடுங்கி ஓலமிட்டன என்று எழுதப்பட்டுள்ளது. அதோ அவைகள் மக்கள் சரீரங்களை விட்டு புறப்பட்டு ஓடின என்றும் ஆதாரத்தோடு எழுதப்பட்டுள்ளன.

14) **சக்தியுள்ள மனிதன்** எவனும் தன்னை எதிர்ப்போரை அடக்க தன் முழு பெலத்தையும் பயன்படுத்தி எதிரியை தாக்காமல் இருந்ததில்லை. மாறாக **ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் திருப்பி காண்**பி என்பதை தானே செய்து காட்டினார். (தன் வல்லமையை நன்மைக்கு மட்டுமே பயன்படுத்தினார்).

15) மனிதன் முன்னறித்தவைகளில் பல்லாயிரத்தில் ஒன்று நடைபெறும் சாத்தியம் உள்ளது. ஆனால் **இயேசுகிறிஸ்து கூறியவை அனைத்தும்** ஒன்று தவறாமல் அப்படியே நிறைவேறிற்று - இப்போதும் இன்னும் நிறைவேறிக்கொண்டிருக்கிறது.

16) **மனிதன் முகத்தையும் மனிதனுடைய வார்த்தையையும்** கவனித்து கொஞ்சம் அவனைப்பற்றி அறிந்துக்கொள்ளும் சக்தி உடையவன். ஆனால் இயேசு கிறிஸ்து **மனிதருடைய உள்ளத்தில் இருந்தவைகளை** அப்படியே அறிந்திருந்தார். உள்ளத்தின் நினைவுகளையும் அறிந்திருந்தார் என்று காண்கிறோம். மனிதன் பார்க்கிற விதத்தில் நான் பார்ப்பதில்லை. மனிதன் முகத்தை பார்க்கிறான், தேவனோ இருதயத்தை பார்க்கிறார். இயேசு அவர்கள் உள்ளத்தில் சிந்திப்பதை அறிந்த என்று வேதத்தில் பல இடத்தில் வாசிக்கிறோம்.

17) ஒரு இடத்தில் இருக்கிற மனிதன் வேறு இடத்தில் இருப்பவனை தொடவும் சுகப்படுத்தவும் முடியாதவன். ஆனால் **இயேசுகிறிஸ்து நீ போகலாம் உன் விசுவாசத்தின்படி** (வியாதி படுக்கையிலே படுத்திருக்கும் உன் வேலைக்காரனுக்கு) **ஆகக்கடவது** என்றார். அவன் வீட்டிற்கு வந்த பார்த்தவுடன் அவன் சுகமானதை கண்டனர். இயேசு அந்த வார்த்தையை சொன்ன அதே நாழிகையில் அவன் சுகமடைந்திருந்தான் என்பதை அவன் கேட்டறிந்தான். தேவனை மகிமைப்படுத்தினான்.

18) எந்த மனிதனும் ஒரு மரத்தை பார்த்து வாயினால் பேசி சபித்தால் உடனே அது **பட்டுப்போகாது.** ஆனால் இயேசு **சொன்ன மாத்திரத்தில் அத்தி மரம் அந்த நிமிடமே பட்டுபோயிற்று.** (எந்த மனிதனுக்கும் இயேசு இப்படி செய்யாமல் மரத்திற்கு மட்டும் அப்படி செய்தது, மரமும் மனிதனும் சமமல்ல, மரம் மனிதனுக்காக படைக்கப்பட்டது என்பதையும் இதிலே விளங்கச்செய்தார்.) ஆனால் யூதர்களுக்கு எச்சரிக்கை கொடுக்க மரத்தை உதாரணமாக்கினார்.

19) மனிதன் லேசர் கதிர்களை வைத்து பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள கருவிகளை பயன்படுத்தி வியாதிகளில் சிலவற்றை விஞ்ஞான யுகத்தில் சுகமாக்கலாம். ஆனால் இயேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தை விரலினால் தொட்டவுடனே விரலினால் சுகமானார்கள்.

20) அன்புள்ள எந்த மனிதனும் 5000 பேருக்கு உணவை சமைக்காமலேயே விலைக்கு வாங்கமலோ கொடுக்கமுடியாது. ஆனால் இயேசு **5 அப்பத்தையும், 2 மீன்களையும்** 5000 பேருக்கும் அதிகமானவர்களுக்கு பசி தீரும் வகையில் பங்கிட்டுக்கொடுத்தார்.

21) எந்த மனிதன் பிறந்தபோதும் **நட்சத்திரம் உதித்து** வழிகாட்டாது. இயேசு பிறந்தபோது நட்சத்திரம் தோன்றி அவர் இருக்கும் இடம்வரை வழி காட்டிற்று .

22) எந்த மனிதன் சாகும்போதும் **இயற்கை சூரியன் இருளானதில்லை.** இயேசு மரித்தபோது **சூரியன் மறைந்தது.** இருள் உலகை மூடிற்று (மூன்று மணி நேரம்) **பூமி அதிர்ச்சி உண்டானது** (மத் 27:51-53) இயற்கையை படைத்தவர் என்பதை இப்படிப்பட்ட இயற்கைக்கு அப்பால் நடந்த இப்படிப்பட்ட அற்புத இறைவன் இவர்தான் இறைவன் என்பதை உறுதிசெய்தது.

23) வேதனையில் (கொடிய காயங்களுடன்) சிலுவையில் தொங்கும் எம் மனிதனும் ஐயோ அம்மா என்று புலம்பாமல் முனகாமல் இருக்கவே முடியாது. இயேசுகிறிஸ்து பயங்கர வலியை அனுபவித்துக்கொண்டே இவர்களை மன்னியும். இவர்கள் யாருக்கும் விரோதமாய் இதை செய்கிறோம் என்பதை அறியாமல் செய்கிறார்கள் என்று பிதாவிடம் பரிந்து பேசினார்.

24) 10 ஆயிரம் பேருக்கும் மேற்பட்ட கூட்டம் ஒன்றில் ஒலிபெருக்கி வசதியின்றி எல்லார் காதுகளும் கேட்க பேசுவது மனிதனால் கூடாத காரியம். இயேசு கிறிஸ்துவோ இதனை செய்து காட்டினார். (மாற். 6:34).

25) எந்த மனிதனுடைய பேச்சையும் அல்லது பிரசங்கத்தையும் கேட்டுக்கொண்டு மூன்று இரவு மூன்று பகல் தூங்காமல் சாப்பிடாமல் உட்கார்ந்து பிரசங்கம் கேட்க முடியாது. ஆனால் இவருடைய அற்புத வார்த்தைகளை மலை பிரசங்கத்தில் கேட்டு மக்கள் மூன்று நாள் அப்படியே அமர்ந்திருந்தார்கள். (மாற் 8:2)

26) **மூன்றரை வருட ஊழியம் மட்டும்** செய்து **முழு உலகத்திலும்** தன் கொள்கையை இதுவரை எந்த மனிதனும் பரப்பினது இல்லை. ஆனால் **கிறிஸ்து** அப்படி செய்தார். இதோ உலகம் முழுவதிலும் அவரை பின்பற்றுவோரே அதிகம்.

27) **மூன்றரை வருடத்தில்** அவர் **பேசினவற்றைப்பற்றி** எழுதப்பட்டுள்ள புத்தகங்களே இன்றைக்கு உலகில் மிக அதிகம். இன்று சிறந்த புத்தகங்கள் 100 தேர்வு செய்யப்பட்டுள்ளன. அவைகளில் முதல் இடம் பைபிளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதனால்தான் உலகிலேயே கிறிஸ்தவ வேத புத்தகத்திற்கு மட்டும். (THE BIBLE) **தி பைபிள்** என்று அழைக்கப்படுகிறது. தி குரான் என்றோ, தி கீதா என்றோ அவைகள் அழைக்கப்படுவதில்லை.

28) **கிறிஸ்தவ வேதம் ஒன்றே** உலகில் மிக அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. புதிய எழுத்து கண்டறியும் எந்த மொழியிலும் வேதத்தையே முதலாவது அச்சடிக்கப்படுகிறது.

29) கொள்கையளவில் மட்டுமின்றி இன்றும் அவரை நோக்கி கூப்பிடுவோருக்கு அவர் பதிலளிப்பது கண்டு இன்றும் **அவர் உயிரோடிருப்பதை அறிவிக்கிறது.**

30) இவ்வுலகைவிட்டு பிரியும்போது எவரும் உங்களோடு இருக்கிறேன் என்று கூறினதில்லை. மீண்டும் வருவேன் என்று ஒரு காலத்தைக்குறித்து சொல்லிவிட்டு சென்றதும் இல்லை. இவ்விரண்டையும் இயேசு செய்தார். அவர் குறித்துள்ள காலம் நாம் **வாழும் யுகம் தான்.**

31) எந்த மனிதனும் **நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன்** (யோவான் 6:42) **நான் உயர்விலிருந்து உண்டாக்கினவன்** (யோவான் 8:23) **நான் இந்த உலகத்திலிருந்து உண்டானவன் அல்ல என்று கூறியதில்லை. ஆனால் இயேசு அப்படி கூறினார்.**

## இயேசுவே பிரிவினையை உண்டாக்குகிறாரா ?

**நான் சமாதானத்தை அல்ல பிரிவினை உண்டாக்க வந்தேன் என்று இயேசு கூறியதின் அர்த்தம் என்ன?**

இறைவன் இயேசுவிடமிருந்து **அன்பும்,இரக்கமும்,சமாதானமும்,சந்தோஷமும் ஒற்றுமையையும்** வருகிறது என்று அறிவோம். அவர்தான் இவைகளை தருகிறவர் என்று நாம் எதிர்பார்க்கையில் இவரோ சமாதானத்ததை அல்ல பிரிவினையை உண்டாக்க வந்தேன். என்கிறாரே, இது என்ன ?

ஆனால் இந்த வார்த்தையை இயேசு கூறும்முன் சத்துருக்களாக இருந்த ஏரோதுவும் பிலாத்துவும் அவர் பாடுபட்ட நாளில் சிநேகிதர்களானார்கள். லூக் 23:12 என்றுதான் நாம் பார்த்திருக்கிறோமே ஒழிய பிரிவினை உண்டாக்கினதாக எந்த இடத்திலும் நாம் பார்க்கமுடியாது. அவர் கூறும் பிரிவினையின் பொருள் என்னவெனில் பாவிக்கும் பரிசுத்தவானுக்கும் ஏற்படும் பிரிவினை என்பதை இதுவன்றி வேறல்ல. அதாவது ஒரு வீட்டில் ஒரு மனிதன் **இயேசுவை**

**ஏற்றுக்கொண்டால் அவன் மனந்திரும்புகிறான்.** முன்னாளில் அவன் செய்த பாவச் செயல்கள் கெட்ட பழக்கவழக்கங்கள், பாரம்பாரியங்கள் இவற்றை செய்வதை விட்டுவிடுகிறான். அவன் புது சிருஷ்டியாகிறான். உடனே அதே வீட்டில் உள்ள மனிதர்கள் இவன் மனமாற்றத்தை விளங்கிக்கொள்ளாமல் அவனை வெறுக்கவும் திட்டவும், ஒதுக்கவும், நிந்திக்கவும் ஆரம்பிக்கின்றனர்.

உதாரணமாக நல்ல நேரம் முகூர்த்தநாள் பார்த்து கல்யாணம் செய் என்பார்கள். எல்லா நேரமும் கடவுள் உண்டாக்கியது. அது நல்ல நேரம்தான் என்று அவன் கூறுவான். ஆனால் மனந்திரும்பாத வீட்டிலுள்ள அப்பா,மகள்,மாமியார் யாவரும் அவனை வெறுப்பார்கள். ஒரே குடும்பத்தில் ஒருவன் இயேசுவை ஏற்றுக்கொண்டதால் ஏற்பட்ட பிரிவினை இதுதான்.

நல்ல காரியத்துக்கு பொய் கூறலாம் என்பர். - பொய் நாவு கடவுளுக்கு அறுவறுப்பு என்பான். உள்ளதை உள்ளதென்றும் இல்லாததை இல்லை என்றும் கூறுங்கள் என்று இயேசு கூறியதைத்தான் இவனும் பின்பற்றுவான் என்றால் அங்கு பிரிவினை வந்துவிடுகிறது.

உன்னை கெடுத்தவனை கெடு என்பர். இவனோ சத்துருவை நேசி வேதம் கூறுகிறது என்பான்.

சினிமா வெறும் பொழுதுபோக்குதான் என்பர். - ஐயோ அது படு பாவம். அது மனதை சபலத்துக்கு கொண்டுபோகும் என்பான்.

விக்ரகங்கள் வடிவத்தில் உள்ள பசு, பன்றி, பாம்பு, மீன், நெருப்பு. எலி, எருமை, மயில், சேவல். யாவும் தெய்வங்கள் என்பர். அவைகள் யாவும் பேசாதது, கேட்காதது, பார்க்காதது நடக்காது. அவைகளை மனிதன்தான் உண்டாக்கினான். கடவுளை மனிதன் உண்டாக்க முடியாது. உடனே இதை ஏற்றுக்கொள்ளாத வீட்டில் உள்ள யாவரும் பகையாவார்கள், பிரிவினை வந்துவிடும்.

**நம்முடைய குலம் ஜாதி என்பர். எல்லாம் சமம் என்பான்.**

உலகம் போகிற போக்கிலே போ என்பர். உலக சிநேகம் தேவனுக்கு பகை என்பான். இப்படியாக முதலில் இருந்து முடிவு வரை எதை தொட்டாலும் நீதியையும் நேர்மையையும் கடைபிடிக்கும்போது உன் வீட்டாரே உனக்கு சத்துரு என்று இயேசு கூறியதுபோல மனந்திரும்பிய கிறிஸ்தவனுக்கும் வீட்டில்உள்ள மற்றவருக்கும் தானாகவே பிரிவினை வந்துவிடுகிறது.

ஆம் இயேசுவை ஏற்றுக்கொண்ட மனிதன் **புது சிருஷ்டியாகிறான்.** பழையன யாவும் **மறையும் எல்லாம் புதிதாகும் பரிசுத்தமாகும்.** இதனால் பழைய நிலையில் வாழும் வீட்டில் இருப்பவர்கள். அவனை பழிப்பார்கள். அவனை விட்டு பிரிவார்கள்.

இதுவே இயேசுவானவர் ஒரு வீட்டில் ஒருவனை அல்லது ஒருவளை மனந்திரும்புதலின் அனுபவத்தை கொடுத்தால் வீட்டிலுள்ள அனைவருக்குள்ளும் பிரிவினை உண்டாகிறது. வீட்டில் உள்ள எல்லாரும் மனம் திரும்பினால் சொல்லவே வேண்டாம். அது ஒரு குட்டி பரலோகம் போல் மாறிவிடுமே.

## கேள்வி 29) **இயேசுவின்வருகையின் நாழிகை (இயேசுக்கே) அவருக்கே தெரியாதா?**

**அந்த நாளை என் பிதா ஒருவர் தவிர வேறொருவறும் அறியார். தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார் என்று இயேசு கூறினார்.** (மாற் 13:32)

இரகசியங்கள் அறிவிக்கப்படுவதில் தேவன் முறையான சில படிகளை வைத்துள்ளார் என்று வெளிப்படுத்தல் 1:1 மூலம் நாம் அறிகிறோம்.

1) முதலில் தேவன் நமது **இரகசியத்தை** அறிவிக்கவே விரும்புகிறார்.

2) தேவன் இதனை கிறிஸ்துவின் **ஊழியராக** அப்போஸ்தலனுக்கு தெரிவிப்பார். கிறிஸ்துவுக்கு அறிவிக்கிறார்.

3) கிறிஸ்து தமது **தூதனுக்கு** அறிவிக்கிறார்.

4) இத்தூதன் கிறிஸ்துவின் ஊழியராக **அப்போஸ்தலருக்கு** தெரிவிப்பான்.

5) இவ்வப்போஸ்தலர் ஆகிய ஊழியர் சபையின் **கண்காணிப்பு** அறிவிக்கிறார்கள்.

6) இக்கங்காணி **சபைக்கு** அறிவிக்கிறார்.

7) இச்சபை **உலகத்திற்கு** அறிவிக்கிறது, அறிவிக்கவேண்டும்.

1) பிதாவாகிய தேவன் கிறிஸ்துவின் வருகையின் காலத்தை அவருக்கு (இயேசுக்கு) கூறிவிட்டார். கூறினாலும் **அந்த நாளையும் அந்த நாளில் எந்நாழிகையில் இது நடக்கும்** என்பதையும் இயேசு பூமியிலிருந்த நாட்களில் இதைத்தான் முக்கியமாக கவனிக்கவேண்டும். பூமியில் இருந்த நாட்கள் அவரிடம் கூறப்படவில்லை. (எல்லாவற்றையம் அறிவித்துவிட்டேன் என்று இயேசு கூறிவிட்டார்) ( மாற் 13:23)

2) **தேவன் இயேசுவிடம் கூறவே மாட்டார்** என்பதல்ல கூறினார். அதை தமது சபைக்கு செய்தியாக அனுப்ப கடமைப்பட்டுள்ளார். யூதாஸ் காட்டிக்கொடுப்பான் என்ற விஷயத்தில் யோவானுக்கு மறைமுகமாக அவர் சொல்லிக்கொடுக்கிறார். அவர் அவ்வளவு அன்பு உள்ளவர். (யோவான் 13:26)

3) **பிதாவிற்கு காலங்களை மாற்றும் அதிகாரம் உண்டு.** (மத் 24:22) தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் நிமித்தம் அந்த குறிப்பிட்ட காலம் குறைக்கப்படவோ அல்லது நீக்கப்படவோ வேண்டி வரலாம்.

4) சுவிசேஷ பிரபல்யத்துக்காகவும் அவர் **காலத்தை** நீட்டிக்கலாம் (மத் 24:14)

மேற்கூறிய காரணங்களால் **பிதா,குமாரனுக்கு அந்த நாளையும், நாழிகையையும் வெளிப்படுத்தவில்லை.** ( பூமியில் இருந்த நாளில் என்பதை கவனிக்கவேண்டும்)

அதனால் தற்போது **இயேசுவுக்கு தெரியாது** என்று கூற முடியாது.

எனினும் மனிதன் எவனும் எக்காலத்திலும் அந்த **நாளையையோ நாழிகையையோ அறிய முடியாது** என்பது எழுதப்பட்ட சத்தியம் எனவே ஏமாறாதீர்,ஏமாற்றுபவர்களை(இனம்கண்டு) விட்டுவிலகி தப்பித்துக்கொள்ளுங்கள். இயேசுவின் இரண்டாம் வருகையை குறித்து **ஏஞ்சல் TVயில் சாது செல்வராஜ் கூறினாலும், ஆசீர்வாதம் TV யில், சத்தியம் TVயில் சகோ. வின்சென்ட் செல்வகுமாரும், மோகன் சி. லாசரஸ்சும்** சம்பாஷனைகளில் கூறினாலும் மற்ற **தீர்க்கதரிசிகள் அப்போஸ்தலர்கள்** என்று அவர்களாவே பெயர் வைத்துக்கொள்பவர்கள் யார் கூறினாலும் நம்பாதீர்கள். **கழுதை, சிங்கத்தையெல்லாம்** சின்னமாக வைத்து பேசுவார்கள் நம்பாதீர்கள்.

ஏஞ்சல் TVயில் பிரசவ ஸ்தீரிகளை அழைத்து TVயில் ஜெபிக்க பணம் கேட்பார்கள். வயிற்றில் உள்ள குழந்தையை தீர்க்கதரிசியாக்கிவிடுவதாக கப்சா அடிப்பார்கள் நம்பாதீர்கள். கர்ப்பிணிகளை அன்னிய பாஷை பேச வைத்து குதிக்க செய்வார்கள் நம்பாதீர்கள். குதிக்க வைப்பதால் **சீக்கிரம் பிரசவம்** ஆகும். அது **குறை பிரசவமாகி உயிருக்கே ஆபத்து** உண்டாக்கும். நம்ப வேண்டாம்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# மருந்து சாப்பிடுவது பாவமா?

இந்த கேள்விக்கு நான் தாழ்மையாக சொல்லும் பதிலை சற்று சிந்திக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.

1) **மருந்து என்பது தேவன் படைத்த ஆரோக்கிய அம்சம்.** அவர் படைப்பின் முழுமை.

2) அதைக்குறித்த **மனிதனின் கண்டுபிடிப்பு** அவர் நடத்திப்பு அது விஞ்ஞானிகளுக்கு கர்த்தரே கொடுத்த ஞானம்.

3) மருத்துவம் என்பது பிசாசோடும் அவன் நமக்கு தரும் வியாதிகளோடும் எதிர்த்து போராட தேவன் தந்த ஞானம் என்ற ஈட்டியாகும். "விசுவாசம்" என்னும் கேடகத்தால் விசுவாசிகள் போராடுகின்றனர். மருத்துவ ஞானம் என்ற ஈட்டியால் மருத்துவர்கள் போராடுகின்றனர்.

**நமக்கு விரோதியிராதவன் நம் பட்சத்தில் இருக்கிறான் என்று இயேசுகிறிஸ்து கூறினார் . மாற் 9:40**

4) **மருந்து சாப்பிடதல் பாவம்** என்று வாதாட கூடாது. அப்படியானால் கண்ணாடி அணிதலும் விழுந்துபோன பல் கட்டுதலும் தவறாகாதா? அநேக ஆண்டகளுக்குமுன் சுமார் 37 வருடங்களுக்கு முன் இலங்கை பெந்தேகோஸ்தே சபை பாஸ்டருக்கு இரகசியமாக என் நண்பர் பல் டாக்டர் பவுலோஸ் என்பவரிடம் முழு பல்களையும் அமைத்து கொடுத்தேன். அப்படியே கண்களில் மருந்துவிட்டு (அந்த காலத்தில் கம்ப்யூட்டர் கருவி இல்லை) கண்மணியை பெரிதாக்கி கண்ணாடி அணிய உதவினேன். நான் ஆப்பிக்கா பயணத்துக்காக (Yellow Fever) என்ற வியாதி கொசு ஆப்பிக்காவில் நிறைய உண்டு. அது நம்மை தாக்காமல் இருக்க தடுப்பு ஊசி போட்டுக்கொண்டு அந்த விவரத்தை விமான நிலையத்தில் காட்டினால்தான் நம்மை விமானத்தில் பயணம் செய்யவிடுவார்கள். சென்னை, இலங்கை பெந்தேகோஸ்தே சபை சீனியர் பாஸ்டர் ஒருவர் என் அருகே அமர்ந்திருந்தார். நான் அவரிடம் நீங்கள் CPM பாஸ்டர்தானே?ஆமாம் என்றார். நான் பதிலாக உங்கள் சபை உபதேசம் மருந்து எடுக்ககூடாதே என்றேன். அவர் தாமதிக்காமல் மேலான அதிகாரங்களுக்கு கீழ்படியவேண்டும் என்று வேதம் கூறுகிறது. அதற்கு கீழ்படிந்தால்தான் என்னை சவுத் ஆப்பிரிக்கா போக விடுவார்கள் என்றார். தங்களுக்கு சாதகமாக வக்கீல்கள் போல சபை சட்டத்தை விளக்க சில வசனங்களை மனப்பாடம் செய்து தன் சபை ஜனங்களை ஏமாற்றுகிறார்கள்.

5) தேவன் மண்ணில் படைக்கும் செடியில் வெள்ளை பூண்டை தமது **ஞானத்தால் இயற்கை மருந்தாக** (இது இப்போது கேப்சூல் ரூபத்தில் விற்கப்படுகிறது) படைத்துவைத்திருக்கிறார். தேவனால் **மண்மீதும் பூண்டின்மீதும்** அதிகாரம்பெற்றுள்ள மனிதன் அதன் சாற்றை பிழிந்து எடுத்து மாத்திரையாக்கி கடையில் பாட்டிலில் போட்டுவைத்து **கார்லிக் கேப்சூல்** என்று

விற்பனை செய்கிறான். இயற்கையாகவும் சாப்பிடலாம். ஆனால் **மாத்திரையாக சாப்பிட கூடாது** என்றால் மாம்பழ சாற்றையும் இயற்கையாகத்தானே சாப்பிடவேண்டும். பாட்டிலில் அடைத்து விற்கும் மாம்பழ சாற்றை அருந்துவது தவறாகாதா?

தேவன் தண்ணீரை படைத்து இருக்கும்போது மனிதன் தண்ணீரில் மாற்றம் ஏற்படுத்திட (சோடாவாக) இவர்கள் ஏன் குடிக்கிறார்கள் சோடா குடிப்பது தவறாகாதா?

6) சளிப்பிடித்தால் **யூக்கலிப்டஸ்** இலை சாற்றை முகர்வதும் **மஞ்சளின் புகை** பிடிப்பதும் இயற்கை மருத்தும்தான். இப்படியே தேவன் தந்த ஞானத்தால் கஷ்டப்பட்டு மருந்து ஒன்றை மனிதன் கண்டுபிடித்தால் அதனை பயன்படுத்துவது பாவமா?

7) **இங்கிலீஸ் மருந்து சாப்பிடுவது பாவம்** என்று கூறிவிட்டு நாட்டு மருத்துவத்தை கையாளுவதுதான் **பரிசுத்தமா?** இது பழமையும் பாரம்பரியத்தையும் விடமுடியாத சுபாவமதான்.

8) நாம் சாப்பிடும் எல்லா உணவு பொருள்களிலும் மருத்துவ சக்தி இருக்கிறது. அதில் எதிலாவது குறிப்பிட்ட சத்துள்ள ஆகாரத்தை நாம் குறைவாக சாப்பிடுவதால் **வியாதிகள்** வரலாம். இதற்கு நிவாரணமாக அந்த குறைந்த சத்தை மாத்திரையாக உட்கொள்வதில் தவறேது.

9) கொதிக்க வைத்த தண்ணீரை குடிப்பதற்கு தேவன் எங்காவது அனுமதி கொடுத்ததுண்டா? வெந்நீரை குடிக்கும்போது உடலுக்கு சுகம் உண்டாகுகிறது. அதில் தீமை இல்லை எனில் தீமையில்லாமல் சுகம் உண்டாக்கும் மருந்து பயன்படுத்தினால் அதில் தவறெதுமில்லையே.

10) எல்லாவற்றிக்கும் மேலாக பிணியாளிக்கு வைத்தியம் அவசியம் என்று இரட்சகர் அற்புதர் இயேசுவே கூறிவிட்டபோது மற்ற பொய்யர்கள் கூறுவதை பொருட்படுத்தகூடாது.(மாற் 2:17)

11) எசேக்கியா சுகம் அடைய தீர்க்கதரிசி **அத்திபழ அடையை** போடசொல்லவில்லையா? ஏசாயா 38:21

12) உன் வயிற்றிற்காகவும், பெலத்திற்காகவும் கொஞ்ச திராட்சை ரசம் கட்டிக்கொள் என்று பவுல் தீமோதேயுவுக்கு கூறவில்லையா?(அதுதான் திராட்சை அரிஷ்டம் என்பது) என்று விற்கப்படுகிறது. (1 தீமோ 5:23) நல்ல சமாரியன் திராட்சை ரசம் எண்ணெய் இவற்றை காயத்துக்கு பயன்படுத்தினானே.

13) விலா எலும்பை எடுத்தால் அவனுக்கு வலிக்குமே என்று தேவன் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை உண்டாக்கி ஆப்ரேசன் நடத்தி ஏவாளை உண்டாக்கவில்லையா? மனிதன் குளோராபாம் கொடுத்து அயர்ந்த நித்திரை உண்டுபண்ணுகிறார் ஆப்ரேசன் நடத்துகிறான். இதனை பார்க்கும்போது வலியில்லாமல் இருக்க மனிதன் கண்டறியும்படி கர்த்தர் செய்துள்ள ஞானத்திற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று கூற வேண்டும்.

14) எபிரேய **ஸ்தீரிகள் எகிப்தில் மருத்துவச்சிகளாக**(நர்சுகளாக) பணிபுரிந்திருக்கின்றனர். யாத் 1:15

15) முற்பிதாக்களில் ஒருவரான யாக்கோபுவின் மனைவி ராகேலுக்கு **தனி மருத்துவச்சி** (NURSE) இருந்து பிரசவம் பார்த்தாள். (ஆதி 35:17)

16) மருந்து சாப்பிடுவது பாவம் என்றால் மருத்துவ துறையில் வேலைப்பார்க்கும் **விசுவாசிகளின் தசமபாகத்தை வாங்குவதும்** பாவத்தில் 10ல் 1பங்கு பெறுவதல்லவா? வாங்கலாமா?. அப்படிப்பட்ட பாவத்தின் தசமபாகம் பாஸ்டருக்கு தேவையா?

17) இவர்களுக்கு திருவிருந்து கொடுக்கும் தலைவர் பெரும்பாவத்தை அல்லவா செய்கிறார்.

எனவே தேவன் தந்த ஞானமே **மருத்துவ ஞானம்** என்று அறிகிறோம். மிகவும் முக்கியம் மருத்துவத்திலும் விசுவாசமே பெரியது. தேவனுக்கு மகிமை உண்டாவதாக. இதே மருந்து நமக்கு பாவமாகிவிடும் அபாயமும் உண்டு. ஆண்டவரை காட்டிலும் எதற்கு முக்கியத்துவம் கொடுத்தாலும் தேவனிடத்தில் நமக்கு பங்கில்லை. விசுவாசத்தினால் வராத யாவும் பாவமே. தேவன் கைவிட்டாலும் மருந்தும் கைவிடாது என்ற எல்லைக்கோ பாவத்தினால் வரும் வியாதிக்கு மருந்துதான் பரிகாரம் என்றோ ஒரு விசுவாசி சென்றால் நாசமடைவான். ஆசா என்றால் வைத்தியன் என்று பொருள். இவன் தனக்கு வந்த வியாதியில் கர்த்தரை தேடாமல் வைத்தியரை தேடினான். வைத்தியத்திலேயே அவன் அழிந்தான். எச்சரிக்கை!. (2 நாளா 16:12)

1) **மனிதனால் கூடாதது தேவனால் கூடும். மருத்துவ ஞானம் கைவிடும்போது தேவன் அற்புதம் செய்ய வல்லவர் என்பதை நிருபிப்பார். ஜெபத்தின் மீதும் கர்த்தரின் மீதும் அவர் வார்த்தையின்மீதும் அற்புதத்தின்மீதும் நம்பிக்கை இழப்பதற்கு எனக்கு மருத்துவம் இடறலாக இருக்குமானால் சத்தியத்தை மறுதலிப்பதைவிட சத்தியத்தை பற்றிக்கொண்டே சாவதே மேல்.**

இது விஞ்ஞான யுகம். பிசாசு மிக தந்திரமாக மருத்துவத்தை **நமது விசுவாசத்திற்கு விரோதமாக** செயல்படுத்தும்போது மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

2) **மருந்து எடுப்பதில்லை** என்று தனிப்பட்ட முறையில் பொருத்தனை இருக்குமானால் அது என் மட்டில் இருக்கவேண்டும். பிறர்மீது திணிக்கக்கூடாது. இதற்காக மருத்துவத்தை பிசாசின் ஞானம் என்று கூறினால் தேவனையே துக்கப்படுத்துவதாகிவிடும்.

3) எல்லாவற்றிற்கும் மருந்தை நம்பியிருப்பவர்கள் தன் ஆஸ்தியெல்லாம் செலவு பண்ணியும் சுகம் அடையாத 12 வருட பெரும்பாடுள்ள ஸ்தீரியை நினைத்துக்கொள்க.

மருத்துவத்தால் சுகமான **வியாதி திரும்ப வராது** என்ற உத்திரவாதம் உடையதல்ல. ஆனால் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் வரும் அற்புத சுகமே நிரந்தரமானது. தீமை செய்யாதது. எதிர் விளைவு இல்லாதது. முற்றிலும் இலவசமானது. அது இரட்சிப்பிற்கு வழி நடத்துவது.

**மிஞ்சின நீதிமானாயிராதே. பிர 7:16.**

# முக்கிய அறிவிப்பு

**டாக்டர். புஷ்பராஜ் (ஜாமக்காரன்) என்ற பெயரில் எனக்கு வாட்ஸ்அப், பேஸ்புக் எதுவும் இல்லை. என் பெயரிலோ, ஜாமக்காரன் பெயரிலோ யாரைக் குறித்தாவது எழுதப்பட்டிருந்தால் அல்லது புகைப்படங்கள் வெளியிட்டிருந்தால் அதற்கும் எனக்கும் அந்த வாட்ஸ்அப், பேஸ்புக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை இதன்மூலம் அறிவிக்கிறேன். அப்படி எதையாவது என் பெயரில் அல்லது ஜாமக்காரன் பெயரில் கண்டால் உடனே எனக்கு அறிவிக்கவேண்டுறேன்.**

**- டாக்டர் புஷ்பராஜ்**

# சத்தியம் டிவி

**சத்தியம் TV நிலையத்தினர்** சேலத்தில் **என் வீட்டிற்கே** வந்து **நேர்முக சம்பாஷைனையை பதிவுசெய்து** வெளியிட்டனர். **சம்பாஷனை** இயற்கையாக இருக்க வேண்டும் என்பதற்காக நான் இளைப்பாரும் ஆசனத்தில் **அமர்ந்த நிலையிலேயே நேர்காணலை பதிவு செய்தார்கள்.**

வீட்டிற்குள்ளேயே **அனைத்து கருவிகளையும்** கொண்டு வந்து பல கோணங்களில் **காமிராக்களை** அமைத்து அருமையாக பதிவு செய்தார்கள். சத்தியம் TVயில் வேலை செய்யும் **இரட்சிக்கப்பட்ட** தம்பிமார்களின் **பெரும்முயற்சியால்** என் சம்பாஷனையில் **எந்த கட்டுப்பாடும் விதிக்காமல்** சுதந்திரமாக **என்னை பேச வைத்தார்கள்.**

ஆதியிலிருந்து **என் வாழ்க்கை,** படிப்பு,**ஊழியம்**,குடும்பத்திரைப்பற்றி **உபதேச குழப்பங்களைப்பற்றி,என்னைப்பற்றி** பரவலாக கூறும் **குற்றசாட்டுகளைப்பற்றி** எல்லா **ஊழியர்களையும் தாக்கி** ஜாமக்காரனில் **எழுதுவதைக்குறித்து** பிஷப்மார்களையும் அவர்களின் **தவறுகளை** சுட்டிக்காட்டும் தைரியத்தின் காரணத்தைக்குறித்து, ஜாமக்காரன் **பத்திரிகை** ஆரம்பித்த விதம் பத்திரிகையின் நோக்கம், வேத வசனங்களைக்குறித்த சந்தேகங்கள் இப்படி பல கேள்விகளுக்கு நான் அளித்த பதிலை ஒவ்வொரு வாரமும் சத்தியம் TVயில் ஒளிபரப்பினார்கள்.

அதைப்பார்த்து பலர் மிகவும் சந்தோஷப்பட்டு ஏராளமான கடிதங்கள் மூலம் எனக்கு அறிவித்தார்கள். **என் சாட்சி** எந்த அளவு அவர்களுக்கு **பிரயோஜனமாக** இருந்தது என்பதைப்பற்றி எழுதி அவர்கள் மேலும் ஓர் ஆச்சரியத்தை வெளியிட்டார்கள். அதாவது நான் பேசும்போது அந்த சம்பாஷனையில் **தீர்க்கதரிசனத்தைப்பற்றியும்** பொய்யான **தீர்க்கதரிசனங்களைப்**பற்றியும், **வெளிப்பாடுகளைக்**குறித்தும் **கண்டித்து** பேசி அவைகள் **கடைசிகால கள்ளஉபதேசம்** என்று நான் TVயில் வெளிப்படையாக பேச **எப்படி தைரியம் வந்தது** என்று எழுதினார்கள். உலகமே அதை பார்த்ததே! என்று ஆச்சரியப்பட்டு எழுதினார்கள். பலர் தொலைப்பேசி வழியாகவும் வாழ்த்தினார்கள்.

நான் அவர்களுக்கு பதில் எழுதும்போது **சத்தியம் TVயில்** நான் பேசியதை நானே பார்க்கவில்லை. பலர் கூறியபின் எதிர்பாராமல் ஒருவாரம் நான் கொஞ்சம்மட்டும் பார்க்க நேர்ந்தது. அப்படியிருக்க **எனக்கே ஆச்சரியம்.** அந்த குழப்பமான என் சம்பாஷனையை எப்படி சத்தியம் TVயினர் வெளியிட்டார்கள் என்று நானே ஆச்சரியப்பட்டேன். நான் பேசிய செய்திகளை நீக்காமல் அப்படியே வெளியிட்டதை கேள்விபட்டு சத்தியம் தொலைக்காட்சி நிலையத்தினருக்கு நன்றி கூறுகிறேன்.

மேலும் கள்ள தீர்க்கதரிசனங்களைப்பற்றி நான் வெளிப்படையாக பேசியது வெளிவராது என்றும் அதை மறைத்துவிடுவார்கள் என்றுதான் நினைத்தேன். அவர்கள் TVயில் கூறும் வழமையான வார்த்தைப்போல **சத்தியத்தை சத்தியமாக கூறும் சத்தியம் TV** என்று கூறி முடிப்பதைப்போலவே அவர்கள் நடந்துக்கொண்டதை பாராட்டுகிறேன்.

ஆனால் **அந்நிய பாஷையைப்பற்றி** பேசியதை மட்டும் காணோம், அது என்ன ஆனது? என்று பலர் என்னிடம் கேட்டார்கள். அதற்கு பதில் தெரியவில்லை. எப்படியோ அதை தவிர மற்ற எல்லா செய்திகளையும் மக்கள் கேட்க செய்தார்கள். தேவனை துதிக்கிறேன்.

ஒரு **ஆயத்தமும்** இல்லாமல் **அவர்களிடமிருந்து** எந்த கேள்வியும் முன்பதாகவே நான் பெற்று பதில் தயாரிக்காமல், நேரலையாக (LIVE) என்னை பேச வைத்ததும், நேரடியாக அவர்கள் பதிவு செய்ததும், அப்படியே வெளியிட்டதையும் அறிந்தபோது அவர்களைக்குறித்து ஒரு பெரும் மதிப்பு எனக்கு உண்டானது. கர்த்தர்தாமே அதை தயாரிக்க காரணமானவர்களை குறிப்பாக அதன் டைரக்டர்ஸ்,உரிமையாளர்கள்,டெக்னிஷியன்ஸ் யாவருக்கும் என் வாழ்த்துக்களை கூறிக்கொள்கிறேன்.

பலர் அதன் அத்தனை எபிசோடுகளையும், என் சாட்சி முழுவதையும், **தீர்க்கதரிசனத்தைப்பற்றி** பேசியதையும் ஒரு DVD காப்பி தேவை என்று எனக்கு எழுதி கேட்டார்கள். என்னிடம் அந்த TV காப்பி ஏதும் இல்லை. நீங்களே சத்தியம் TV நிலையத்தினரிடமே கேட்டுப்பெற்றுக்கொள்ளுங்கள். எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. **பணத்துக்காக** நான் பேசவில்லை. அவர்களுக்கு நான் **பணம் கொடுத்ததுமில்லை.** பதிவு செய்ய நான் அவர்களை அழைக்கவும் இல்லை. பல்வேறு தலைவர்களின் நேர்முக சம்பாஷனைக்கு TV யில் பேச ஏற்பாடு செய்வதைபோல் என்னையும் அவர்கள் சந்தித்தனர். ஆனால் அதன் மூலம் கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது. எனக்கு அதுபோதும்!.

## செய்திகள்:

**மார்டின் லூத்தரின்** 500 வது நினைவுநாளில் ஜெர்மனியில் உள்ள Wittenberg நகரில் உள்ள கத்தோலிக்க சபையும்- லூத்தரன் சபையும் தங்களுக்குள் இத்தனை ஆண்டுகள் தங்களை பிரித்த தவறான உபதேச கட்டுப்பாடுகளை, தவறான அடிப்படை உபதேச சத்தியங்களை ஒதுக்கிவிட்டு ஒன்றாக இணைந்து ஒன்றாக ஒரு அறிக்கையும் இணைந்து வெளியிட்டனர். போப்பின் கட்டுப்பாடுள்ள உபதேசங்கள் முக்கியம் அல்ல என்றும் நம் வேத புத்தக உபதேசம்தான் எல்லா அதிகாரத்துக்கும் மேலானது. Bible is the highest authority in matters of faith and whether the Pope has full power over the church both parties(Catholic & Lutheran Church) committed to “Overcome remaining difference between us” and celebrate what they have in common(The Hindu 2017, Nov.1 Wednesday)

## முக்கிய அறிவிப்பு:

‘ என்னோடு **தொலைபேசியில்** தொடர்புக்கொள்ள முடியாதவர்கள், **கடிதங்கள்**மூலம் ஜெபகுறிப்புகளையும், குடும்ப பிரச்சனைகளையும் அனுப்பலாம். ‘ இ-மெயில் மூலம் நீங்கள் எனக்கு எழுதினாலும் உங்கள் விலாசத்தையும்,தொலைபேசி எண்ணையும் தயவுசெய்து குறிப்பிட்டால், கடிதம்மூலமாக பதில் எழுத இயலும். வாரம் இரண்டு நாட்கள்மட்டும் வீட்டில் நான் இருப்பதால் நீங்கள் அனுப்பும் இ- மெயில்க்கு கடிதம்மூலம் என் பிராயணத்தில் உடனே பதில் எழுதமுடியும். அதனால் இ-மெயில் அனுப்புபவர்கள் உங்கள் விலாசத்தையும்,தொலைபேசி எண்ணையும் அனுப்புங்கள்.

### காணிக்கை:

**சில வாசகர்கள் ஜாமக்காரன் பத்திரிக்கைக்காக காணிக்கை அனுப்பினேன் நீங்கள் பத்திரிக்கை அனுப்பவில்லை** என்று எழுதுகிறார்கள். மணியாடரில் நீங்கள் காணிக்கை அனுப்பும்போது எதற்காக அந்த பணம் அனுப்பினீர்கள் என்பது நீங்கள் எழுதமுடியாது. எனக்கு காரணமும் தெரியாது. ஆகவே பணம் அனுப்பிய உடன் ஒரு கடிதத்தில் உங்கள் முழு விலாசத்தையும் தொலைபேசி எண்ணையும் எழுதி எனக்கு பத்திரிக்கை அனுப்பவும் என்று அறிவிக்கவும். புதிய வாசகர்களாக இருந்தால் நான் புதிய வாசகர் என்று எழுதவும். நன்றி.

# IMS MISSIONARY FAMILY RETREAT BANGALURU -KARNATAKA

## திருநெல்வேலி TDTA டையோசிஸ்ஸின் மிஷனரி ஸ்தாபனம்தான் - IMS என்பது Indian Missionary Society(IMS)ஆகும்










### இவர்களின் IMS மிஷனரி ஊழிய பங்காளர்களின் கூடுகை பெங்களூர் நடந்தது:

2017 அக்டோபர் 29ம் தேதி பெங்களூர் St.John School Auditoriumல் வைத்து பெரும் திராளன பங்காளர்கள் கூடிவந்து மிஷனரி பணிக்கு தங்கள் பங்குகளை கொடுத்து நிறைவேற்றினார்கள்.

15 புது பங்காளர்கள் IMS மிஷனரிகளை தாங்க முன்வந்ததாக அறிந்தேன். மேலும் மிஷனரிகளுக்கு மிக அதிகமான சம்பளம் கொடுக்கும் ஸ்தாபனமாக IMS மிஷனரி ஸ்தாபனமும் விளங்குவதாக. நான் கேள்விப்பட்டது எனக்கு சந்தோஷத்தை கொடுத்தது. ஒரு மிஷனரிக்கு மாதம் 12,000 ரூபாயும்,மிஷனரியின் மனைவியின் அலவன்ஸ்ஸாக 6000/ ரூபாயும் IMS கொடுப்பதாக அறிந்தேன். ஆக IMS மிஷனரி குடும்பத்துக்கு மொத்தம் 18000/-ரூபாய் மாத சம்பளமாக பெறுவதாக அறிந்து தேவனைத் துதிக்கிறேன். சகோ.**நேசகுமார்** அவர்கள் எல்லாரையும் அறிமுகப்படுத்தி கூட்டத்தை சிறப்புற நடத்தினார். திரு.**ஜெயசந்திரன்** அவர்கள் பெங்களூர் வட்டார தலைவராக எல்லாரையும் வரவேற்று பேசினார். **சகோ.தங்கசாமி** அவர்கள் மற்றும் ஜெபக்குழ தலைவர்கள் இணைந்து கூட்ட ஏற்பாடுகளை சிறப்பாக நடத்தினர். முக்கியமாக நான் பெங்களூர் IMS குடும்ப கூடுகைக்கு வர மிகவும் முயற்சி எடுத்து என்னை கவனிப்பதில் மிகவும் பொருப்பேற்ற **சகோ.ஸ்டோன்லி** அவர்களுக்கு வாழ்த்துதல் கூறுகிறேன்.

இந்த கூட்டத்தில் St.Johns CSI Churchன் ஆயர் Rev.Wilson அவர்களும், ஒய்வுபெற்ற ஆயர். Rev.Selvin அவர்களும், IMS பொருளாளர் சகோ.Godfrey அவர்களும் St.Johns School கூட்டத்தில் ஒய்வுபெற்ற Principal அவர்களும் கூட்டத்தில் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர். கூட்டம் மிகவும் ஆசீர்வாதமாக முடிந்தது. ஜாமக்காரன் வாசகர்களும் பல்வேறு இடங்களிலிருந்து வந்திருந்தது எனக்கு சந்தோஷத்தை அளித்தது. கர்த்தருக்கே மகிமை உண்டவதாக.

# கர்நாடகா CSI டையோசிஸ்ஸின் கூட்டம் - கிறிஸ்து ஜீவஜோதி ஆலயம்

## CSI CONVENTION (CHINNAPA GARDEN - BANGALURU)






இங்கு நடந்த கூட்டம் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது. Rev.John Peter ஆயர் அவர்கள் ஆராதனை கூட்டங்களை சிறப்பாக நடத்தினார்.30 வருடங்களுக்குமுன் மிக சிறிய ஆலயமாக இருந்தபோது இந்த ஆலயத்தில் பிரசங்கம் செய்தேன். இன்று மிக பிரம்மாண்டமான அழகான ஆலயமாக வளர்ந்ததைக் கண்டு தேவனை துதிக்கிறேன். சபை செயலர் வரவேற்புரை வழங்கினார். ஆயர் அவர்கள் ஆராதனை நடத்தி ஆசீர்வாதம் கூறினார். கர்த்தருக்கே மகிமை உண்டவதாக.

# மணப்பாறை நண்பர் ஜெப ஐக்கியம்







ஒரு பகல் கூட்டமாக சகோ.எட்வர்ட் நேசன் அவர்கள் அனைத்து சபை மக்களுக்குமாய் கூட்ட ஏற்பாடுகளை செய்திருந்தார். கல்யாண மண்டபம் நிறைந்தது. விதவிதமான சபை பாஸ்டர்கள்,ஆயர்கள்,அனைத்து மிஷனரி ஸ்தாபன ஆதாரவாளர்களும், மிஷனரிகளும் வந்திருந்தனர். ஏறக்குறைய மிஷனரி மாநாடு போல கூட்டம் அமைந்தது. பல மிஷனரி ஸ்தாபன மிஷனரிகளின் அனுபவங்களும் பல்வேறு மிஷனரி நிகழ்ச்சிகளும் நடத்தினார்கள். அனைத்து ஊழியங்களுக்காக பல்வேறு சபைகளுக்காக, மிஷனிரி குடும்பங்களுக்காக பல விசுவாசிகள் ஜெபம் ஏறெடுத்தனர். முடிவாக கர்த்தருடைய செய்தியை நான் பகிர்ந்துக்கொண்டேன். தேவ நாமம் மகிமைப்பட்டது. என் உள்ளத்திலும் ஊழியம் ஆசீர்வாதமாக முடிந்ததின் மனநிறைவு ஏற்பட்டது. கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

# சென்னை TELC லூத்தரன் அன்புநாதர் ஆலயகூட்டம்







**மார்டீன் லூத்தர்** அவர்களின் 500 வது ஆண்டு நினைவு விழாவும்,கன்வென்ஷனும் சென்னை **அண்ணா நகர்** மேற்கு TELC ஆலயத்தில் வைத்து மிக சிறப்பாக நடத்தப்பட்டது. பல்வேறு சபைகளிலிருந்தும் குறிப்பாக சென்னை CSI பேராய ஆயர்களும் கூட்டத்தில் கலந்துக் கொண்டனர்.



3 நாட்கள் கூட்டங்கள் மிகவும் சிறப்பாக நடந்தேறியது. **பாகவதர். வேதநாய சாஸ்திரியார்** அவர்கள் என் பழையகால ஆவிக்குரிய நண்பர். அவருக்கு 86ம் வயது என்று நினைக்கிறேன். இந்த வயதிலும் நேரில் வந்து கூட்டத்தில் கலந்து ஜெபித்து கூட்டத்தை ஆரம்பித்துவைத்தது என்னை மிகவும் சந்தோஷப்படுத்தியது. ஆவிக்குரிய நண்பர்களின் வேத வசன கருத்துகளும், உபதேச கருத்துக்களும் ஒன்றாக இருக்கும். ஆவியானவர் ஒருவரே. அப்படித்தான் நாங்கள் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக ஒத்த கருத்துடையவர்களாய் ஊழியம் செய்து வருகிறோம்.

TELC ஆயர் Rev.Dr.Alfred Chandrasekar அவர்கள் அனைத்து கூட்ட ஏற்பாடுகளை மிகவும் பொருப்போடு செய்திருந்தார். பகலில் ஆலோசனை நேரத்தில் சென்னையில் உள்ள என் ஜாமக்காரன் குடும்பத்தினரை சந்தித்து ஆலோசனைக்கூறி ஜெபித்ததில் சந்தோஷம் அடைந்தேன். பெருத்த ஆசீர்வாதமாக கூறவேண்டியது, சென்னையை கலக்கிய பெரும் மழை 3 நாட்களும் கூட்டம் தொடங்கும் முன்பும் கூட்டம் முடிந்தபின் மக்கள் வீடு போய் சேரும்வரை மழையினால் மக்கள் நனையாமல் கூட்டம் நடக்க எந்த இடையூறும் இல்லாமல் கர்த்தர் தம் மக்களை காத்துக்கொண்டார். கர்த்தருக்கே மகிமை உண்டவதாக.

# அந்திக்கிறிஸ்துவின் முன்னோட்டம்:

## வறுமையில் இருந்து மீள இயேசு படத்துக்குப் பதில் சீனாவில் அதிபர். ஜி ஜின்பிங் படத்தை வீட்டில் வைத்த கிறிஸ்தவர்கள்:

**பெய்ஜிங்:** சீனாவின் ஜியாங்ஸி மாகாணத்தில் உள்ளது யுகான் மாவட்டம். இங்குள்ள மக்கள் தொகையில் 10 சதவீதம் பேர் **கிறிஸ்தவர்கள்.** யுகான் பகுதி மிகவும் பின்தங்கி வறுமையில் தவிக்கிறது. இங்குள்ள கிறிஸ்தவர்கள் வறுமையில் தவித்து வருகின்றனர். இந்நிலையில் அதிபர் ஜி ஜின்பிங்(64) வரும் 2020ம் ஆண்டுக்குள் சீனாவில் வறுமை ஒழிக்கப்படும் என்று அறிவித்துள்ளார். அதற்கான செயல்திட்டங்கள் அமல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் உள்ளூர் அரசு நிர்வாகமும் வறுமையை ஒழிக்க பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தத் தொடங்கி உள்ளது. ஆனால் **"இயேசு உங்களை காப்பாற்ற மாட்டார். உங்கள் நோயை குணப்படுத்தமாட்டார். கம்யூனிஸ்ட் கட்சியும், அதிபர் ஜி ஜின்பிங்கும்தான் காப்பாற்றுவார்கள். இயேசு படத்தை எடுத்துவிட்டு அதிபர் படத்தை வைத்துக்கொள்ளுங்கள்"** என்று கூறியதாகத் தெரிகிறது.

அதேபோல் **யுகான்** கிராமத்தில் உள்ள **கிறிஸ்தவர்கள்** பெரும்பாலானோர் இயேசு படத்துக்குப்பதில் அதிபர் **ஜி ஜின்பிங்** படத்தை வைத்துள்ளனர். இத்தகவலை ஹாங்காங்கில் இருந்து வெளிவரும் **"சவுத் சைனா மார்னிங் போஸ்ட்"** என்ற பத்திரிக்கை வெளியிட்டுள்ளது. யுகான் கிராமத்தில் 600க்கும் மேற்பட்டோர் தாமாக முன்வந்து தங்கள் வீடுகளில் உள்ள இயேசுவின் உருவப்படத்தை அகற்றி உள்ளனர். அவர்களில் 453 பேர் அதிபர் **ஜி ஜின்பிங்** படத்தை வைத்துள்ளனர். சீனாவில் **மாசே துங்கை** கடவுளாக வழிப்பட்ட காலம் உண்டு. அதுபோல் இப்போது அதிபர் ஜி ஜின்பிங் செல்வாக்குள்ள தலைவராக உருவெடுத்துள்ளார் என்று கூறுகின்றனர். - நன்றி: தி இந்து - 17-11-2017.

## ஜாமக்காரனின் குறிப்பு:

இப்படிப்பட்ட சூழ்நிலை **அந்திக்கிறிஸ்துவின்** காலத்தில் உண்டாகும் என்று நம் வேதம் எச்சரிக்கிறது. அப்படிப்பட்ட நெருக்கங்கள் இப்போதே சீனாவில் தொடங்கிவிட்டது. இப்படிப்பட்ட சூழ்நிலை வாசகர்களாகிய உங்களுக்கு வந்தால் எப்படி எதிர்க்கொள்வீர்கள்? எதிர்த்து நிற்பீர்களா? அல்லது அவன் கட்டளைக்கு இணைங்கிப்போவீர்களா? மனதில் கற்பனை செய்துப் பாருங்களேன். **சிறு பிரச்சனைகள் வந்தாலும்,வியாதி சுகமாகபோனாலும்** எத்தனையோ கிறிஸ்தவர்கள் மற்ற தெய்வங்களை நாடிப்போகிறார்கள். மந்திரவாதிகளை தேடிப்போகிறார்கள். **அற்புதம்** எங்கு நடக்கிறதோ அவைகளை தேடி ஓடுகிறார்கள். நம்முடைய ஆண்டவர் இயேசு இன்றும் ஜீவிக்கிறார். அவர் மரித்த தேவன் அவரை நம்பி வந்தவர்களை முற்றும் முடிய இரட்சிக்க அவர்(இயேசு) **எப்போதும் உயிரோடியிருக்கிறார்** என்று எபி 7:25 கூறியிருக்கிறது. நம்முடைய விசுவாசத்தை நாம் காத்துக்கொள்வோம். சூழ்நிலைக்கேற்ப பாதுகாப்பை கர்த்தர் நமக்கு தருவார். ஊரே **பஞ்சத்தில் பட்டினியாக** கிடந்தபோது கர்த்தரை நம்பிய அந்த விதவை வீட்டில்மட்டும் **மாவும் குறையவில்லை-எண்ணையும் குறையவில்லை.** கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

## உலக இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் பிறப்பு - இறப்பு - உயிர்த்தெழுதல் - உயிரோடிருத்தல்:

**மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவை** தெய்வமாக ஏற்றுக்கொண்டவர்களுக்குமட்டும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் நம் மரணம்வரை **கிறிஸ்துவின் பிறப்பின் சந்தோஷமும், கிறிஸ்துவின் மரணத்தினால் நன்றி கூறும் சந்தோஷமும், உயிர்தெழுந்தந்தால் உண்டாகும்** நம்பிக்கையின் சந்தோஷமும், எப்போதும் கிறிஸ்து **உயிரோடிருப்பதால்** மரண பயம் இல்லாத சந்தோஷமும், கிறிஸ்துவின் **இரண்டாம் வருகைக்கு** தைரியத்தோடு எதிர்க்கொள்ளும் சந்தோஷத்தையும் **எப்போதும் அனுபவிக்க முடியும்.** மனந்திரும்பாத **பெயர் கிறிஸ்தவர்கள்** எந்த சபையில் இருந்தாலும் மேலே எழுதப்பட்ட எந்த சந்தோஷத்தையும் அனுபவிக்கும் பாக்கியத்தை இழந்தவர்களாவார்கள்.

இதுதான் **ஜாமக்காரனின் கிறிஸ்மஸ் செய்தியோடுள்ள வாழ்த்துதல்** ஆகும். **சந்தோஷமாக இருங்கள், சந்தோஷமாக இருங்கள் என்று மறுபடியும் கூறுகிறேன்.** பிலி 4:4.

**DECEMBER 2017**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.